தமிழ்நாடு அரசு நிறுவிய

கைவினைஞர் நல வாரியத்திற்கு

டாக்டர் வை.கணபதி ஸ்தபதி சமர்ப்பித்த

சிற்பக்கலை மற்றும் கட்டிடக் கலைஞர்

தொழில் பற்றிய

வெள்ளை அறிக்கையும் கோரிக்கைகளும்

கையொப்பம்

(வை.கணபதி ஸ்தபதி)

6-6

தமிழ்நாடு அரசு நிறுவிய

கைவினைஞர் நல வாரியத்திற்கு

டாக்டர் வை.கணபதி ஸ்தபதி சமர்ப்பித்த

சிற்பக்கலை மற்றும் கட்டிடக் கலைஞர் தொழில் பற்றிய

வெள்ளை அறிக்கையும் கோரிக்கைகளும்

கையொப்பம்

(வை.கணபதி ஸ்தபதி)

6-6

தமிழ்நாடு மரபுச் சிற்பியர் தம் வாழ்வியல் வளம் பெற சமர்ப்பித்திட்ட வெள்ளை அறிக்கை

முத்தமிழைக் காப்பது போல் ஐந்தமிழ் எனப்படும் ஐம்மறைகளை ஓங்குறச் செய்தல் – நமது தமிழக அரசின் தலையாய கடமையாகும்

இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் – ஆகிய ஐந்தமிழ் ஓங்குற – ஐம்மறைத் தமிழ்க் கலைகள் நீடு நிலைத்திட – அரசு ஆதரவைக் கோரிடும் நுண்வினைக் கம்மியர் தம் விண்ணப்பம்:–

ஐங்கலைகள் ஓங்குறுங்காலம் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்காலமாக இருக்கட்டும்.

அற்புதம் விளங்குமிந்நூல் அருட்கலைத் திறன்விளங்கும்
பொற்புதம் காலம் எல்லாம் பொன்னொளி திகழ்ந்திருக்கும்
பற்பல காலம் தோன்றாப் பொற்புடன் மறைந்திருந்து
பொற்புறும் காலம் நேரும் பொழுதினில் விளங்கு மன்றே (வை:1212)

White paper on

VANISHING SPIRITUAL - WISDOM OF THE TAMILS -

Revival and Survival

[கைவினைஞர் நலவாரியம் வழியாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பார்வைக்கும், ஆதரவுக்கும் சமர்ப்பிக்கலான அறிவிக்கை]

தொன்று தொட்டு வரும் வினாக்களும், இன்றைய நிலையும்:

பாரதநாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில் 35,000 கோயில்களுக்கும் அதிகமாக இருக்கின்றன என்பர் புள்ளி விவரக் கணக்கர். எந்த நாட்டிலும் இப்படி இல்லையே என வியப்பர் ஆராய்ச்சி மேதைகள். ஏன், எதற்காக எப்படி என்ற வினாக்களையும் அவர்கள் எழுப்புவர். அயல்நாட்டுப் பயணியர் எண்ணற்ற பேர் இந்தியாவுக்கு வந்து போயினர் என்பது தொல் வரலாறு. இவை எல்லாம் குமரிக் கண்டத்தில் நிகழ்ந்திட்ட பிரளயத்துக்குப் பின்னரே (after Deluge) என்பது முக்கிய வரலாற்றுக் குறிப்பு எனக் கொண்டு மேலே செல்லுவோமாக.

மேலை நாட்டினர் மற்றும் சீனர், ஜப்பானியர், ஆஸ்திரேலியர், இந்தோனேஷியர், தாய்லாந்தினர் ரஷ்யர், அரேபியர், ஐரோப்பியர் ஆகியோர் இந்தியா வந்து போனதும், இன்றும் வந்து போவதின் ரகசியம் என்ன?

மேலை நாட்டினர் தமிழ் நாட்டிற்கு வந்து போவது எதற்காக என்றால், இங்கு நாம் கட்டியிருக்கும் வானுயர்ந்த நவீன காலக் கட்டிடங்களையோ, வேறு பல நவீனப்

பொருள்களையோ இயந்திரங்களையோ, கணினிகளையோ பார்ப்பதற்காக அல்ல; அல்லவே அல்ல. காரணம், இவை நம் நாட்டில் காணப்படும் கட்டிடங்களைக் காட்டிலும் மேலை நாட்டில் வியத்தகு நிலையில் – விண்ணை முட்டும் கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலைகள் எழுந்துள்ளன. உண்மை நிலை யாதெனில், நாம் மேலை நாட்டையும் அவர்தம் பொருளாதார மேம்பாட்டையும் பகட்டான உலகியல் கலாச்சாரத்தையும் நோக்கிச் செல்கிறோம். மேலை நாட்டினரோ, நமது கலாச்சாரத்தின் வேர்களைக் காணவும், கலாச்சார மேன்மை தனை அறியவும், நமது எளிய, இனிய வாழ்வியலையும், ஆரோக்யமாகவும், இன்பமாகவும் நடத்தும் வாழ்க்கையின் நுட்பங்களையும் கண்டு, அவற்றைத் தெரிந்து கொள்ளவே இங்கே வருகிறார்கள். சுருங்கக் கூறின், நம்மிடமுள்ள ஆன்மிக கலாச்சாரத்தின் வேர்களைத் தேடி இங்கே அயல் நாட்டினர் வருகின்றனர். இந்தியர்களாகிய நாம், மேலை நாட்டிற்கு செல்வம் தேடி அங்கே செல்கிறோம். [இன்னும் விளக்கமாகச் சொன்னால், நான்முகன் விண்ணோக்கியும், விஷ்ணு மண்ணோக்கியும் சென்று இறைவனின் அடிமுடி காணச் சென்ற கதைக்கு ஒப்பாகும் இக்கதை.] எனினும் அவர்களால் நம் கலாச்சார வேர்களைக் காண முடியவில்லை என்பதையும் நாம் அறிவோம். சரியான விடையைப் பிறகு பார்க்கப் போகிறோம். ஓர் உன்னத விஞ்ஞான அடிப்படை நமது கலாச்சாரத்திற்கு வாய்த்துளது என்பதை நினைவிற் கொண்டு மேலே செல்வோமாக.

<u>திகைப்பூட்டும் மும்முனை ஆய்வுகள்:</u>

இரண்டு பாதைகளுக்கும் அடிப்படையான – ஒத்த விஞ்ஞானம் ஒன்று உளது என்பதை இருசாராரும் உணர்வு மூலம் தெரிந்தும், எந்தப் பாதையில் செல்வது சரி என உறுதி செய்ய முடியாமல் திகைக்கிறார்கள். (They stand parplexed at cross roads not knowing which way to proceed) – சமயம் என்பது வெறும் மதமல்ல, சமயம் என்பது ஒரு கலைச்சொல். அஃது ஓர் விஞ்ஞான நெறி, மற்றும் ஒரு கணக்கியல் நெறி. தவறான வினாக்களையே, விடைகளையே இது நாள் வரை நாம் கேட்டு வந்துள்ளோம். சைவ மாமுனிவர்களை சமயாச்சாரியர் என்றே அழைக்கிறோம். மதாச்சாரியர் என்று அழைப்போம் இல்லை ஏன்? இந்நிலை அங்கும் இங்கும் இருப்பினும் மேலை நாட்டினர் நல்ல ஆய்வு நோக்கோடு இங்கே வருகிறார்கள். நாம் அவர்தம் பொருளாதார நிலையின் ஆதாரங்களைக் கண்டறியவும் பொருளீட்டவும் அங்கு போகிறோம். நமது கலாச்சாரம் Spiritual Culture ஆகும். ஒரே வார்த்தையில் சொன்னால் அவர்தம் கலாச்சாரம் "Industrial Culture" எனலாம். இது தான் இன்றைய வாழ்வியல் போக்கு.

<u>சுகம் தரும் ஆன்ம அனுபவங்கள் மலிந்த தமிழ்க் கலாச்சாரம் Spiritual Culture:</u> leading to the life of peace and bliss!

அதாவது நாம் இயற்றிய இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் என்ற ஐந்தமிழ்க் கலைகள் Spiritual Culture ஐச் சார்ந்தவை. அக்கலைகளில் காவியம் மற்றும் ஓவியம் [அதாவது சிற்பம்

உள்ளிட்ட கட்டிடக்கலை] இரண்டு மட்டும் அன்று போல் இன்றும் நிலையாக நிற்பதின் இரகசியம் என்ன என்பதைக் கேட்டு, ஆய்வு செய்தறியவே அயல்நாட்டினர் நம்நாட்டுக்கு வருகின்றனர். அவை எப்படி நீடித்த – சுகமளிக்கும் நுண்பொருள்கள் ஆயின என்பதையும் கேட்டறிந்திட வருகின்றனர். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் **கோயில் மற்றும் வீடுகள்** அமைப்பில் அடங்கிக் கிடக்கும் **விஞ்ஞானத்தையும்** அது தொடர்புடைய **தொழில் நுட்பத்தையும்** அதனால் **விளையும் பயனையும்** [இசையாய் இசைப் பயனாய் என்பர் நாவுக்கரசர்] தெரிந்திடவே மேலை நாட்டினரும், ஏன் நம் நாட்டினரும் தமிழ்நாட்டிலுள்ள அவ்விடங்களுக்கு சுற்றுலாவாக வந்து செல்கின்றனர் என்றாலும், அவையெல்லாம் என்ன, என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க நம்மவர்களில் ஒரு சிலர் கதைகள் வழியாகவும் புராண இதிகாசங்கள் வழியாகவும் சொல்லிச் சமாளிக்கின்றனர். அறிவியல் காரணங்களைத் தெரிந்தும் திருப்திகரமான விடையினைச் சொல்லிட முடியவில்லையே என்ற ஏக்கம் இன்று வரை நம்மவர்களிடமும் உளது என்பதும் உண்மையே! இது ஏன்?

காவிய – ஓவியக் கலைகளின் தனிப்பெரும் இயல்பும், பயனும்:

இசையும், நடமும் தொன்மை மிக்கனவாயினும் பண்டை இசைவல்லுனர்கள் எப்படிப் பாடினார்கள்? அவர்கள் குரல்வளம் எப்படியிருந்தது? ஏற்ற இறங்கங்கள், நெளிவு சுழிவுகள் எப்படி இருந்தன? எத்தகைய கணக்கியலைத் தழுவிப் பாடினர். நடனம் எப்படி ஆடினார்கள்? ஆடை அலங்கார அணிகளை எப்படிச் சூடியிருந்தார்கள் என்பதை எவரும் இன்று பார்த்தும் கேட்டும் ரசிக்க முடியவில்லையே! பண்டைக் காலப் பண்பாட்டை திரும்பவும் கண்டு போற்ற புகைப்படங்கள் உண்டா, இல்லையே? உண்மை நிலை கண்டறிய முடியவில்லையே இதுவும் ஏன்? இவையிரண்டில் ஒன்று வாய்வழி வெளிப்பட்டு, காதுக்குள் நுழைந்தும் மற்றது கண் வழி புகுந்தும் இதயத்தில் அருவ உணர்வைத் (inner experience or vision or bliss) தந்த நொடியில் மறைந்து போய்விடுகின்றனவே. ஏன்? எப்படி? விளக்கம் என்ன?

காவியமும் [இயல்] ஓவியமும் [சிற்பம்] காலங்கடந்தும் நிலைத்திருப்பது எப்படி?

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய ஓவியத்தையும், சிற்பத்தையும் அன்றிருந்த நம் மக்களின் ஆக்கத் திறத்தையும் கருத்தையும் வாழ்வியலையும் அன்று போல் இன்றும் கண்டு களிக்க முடிகிறதே. நம் முன்னோர் தம் ஆற்றலை அப்படியே இன்றும் கண்டு அளவிட்டு, தரம் கண்டு ரசிக்க முடிகிறதே. இது எப்படி? இது எவ்வாறு சாத்தியம், இதன் உண்மை நிலை என்ன? இப்படிக் கேட்போர் அன்றும், இன்றும் நிரம்பவே உள். [அயனும் படைக்கிறான். மயனும் படைக்கிறான் இதில் அயன் படைப்பு நொடி நொடி மாறிடும் [இயல்பினது என்றும்], ஆனால் மயன் படைப்பு [சிற்பங்கள்] மாறாதே என்பான் மயன் மரபுக் கலைஞன். இதன் ரகசியமென்ன? என்பான் இக்காலக் கலைஞன்] 10,000 முதல் 15,000

ஆண்டுகளுக்கு முன்பு இருந்த கோயில் பற்றியும் கட்டிடங்களைப் பற்றியும் [உ-ம் அங்கோர்வாட், அஜந்தா, எல்லோரா குகைகளும், சிற்பங்களும், மொஹஞ்சதாரோ நகரமைப்பும்] அது சார்ந்த வீடுகளைப் பற்றியும், கட்டுமான நுட்பங்களையும் அவை சார்ந்த கலைத்திறனையும் பார்த்துத் தெரிந்து அதன் பயனையும் அனுபவித்து மேலாய்வு செய்வதற்காக நம் நாட்டிற்கு மேலை நாட்டினர் வந்து போகிறார்கள்!

<u>பரம்பொருள் எங்கும் உண்டு; பெருங்கலை யாண்டும் உண்டு என்பர் மயன் மரபு வழி வந்தோர், இதன் கருத்தென்ன?</u>

எனவே, மேலை நாட்டினரை வசீகரிக்கக் கூடிய வியத்தகு படைப்புகளை கி.பி.12,13ம் நூற்றாண்டு வரை பரம்பரை உணர்வுடனும் ஆற்றலுடனும் சுதந்திரமாச் செய்து வந்தவர்கள் அத்துறை சார்ந்த நுண்வினைக் கம்மியர் மற்றும் கைவினைஞர்கள் ஆவர். ஆனால் பல்லாயிரக்கணக்கில் அன்று இருந்த சிற்பியர் தம் குடும்ப எண்ணிக்கை இன்று அருகிப் போய் விட்டது. ஏன்? எப்படி? இதற்கு என்ன காரணம்? இந்தக் கேள்விகள் இன்றுமுள. சரியான விடை சொல்வாரில்லை எனலாம். ஆராய்ச்சியாளர் படைப்புகளைப் பார்க்கிறார்களே தவிர படைத்தோரை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. இந்தியக் கலாச்சாரத்திற்கு வேர்களாகவும், உரமாகவும் இருந்து வந்த அந்தக் கைவினைஞர்களும், நுண்வினைக் கம்மியர்களும் தற்போது குறைந்து போனதின் காரணம் என்ன? மர்மம் என்ன? இனிக் காண்போம்.

<u>அன்னியர் வருகையும் அதனால் ஏற்பட்ட அழிவும், அவர்தம் பிற்கால ஆய்வும், அதனால் விளைந்த விழிப்புணர்வும்:</u>

கி.பி 13 ம் நூற்றாண்டு காலகட்டத்தில் அன்னியர்கள் நமது நாட்டிற்குள் புகுந்து, நாம் கட்டிய கட்டடிடங்களையும் கோவில்களையும் ஒரு சாரார் இடித்தார்கள். பிறிதொரு சாரார் கலைப் பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றார்கள். இருப்பினும் சில அறிஞர்கள் அவற்றின் அருமை பெருமைகளையும், நுட்பங்களையும் அறிய முடியாவிடினும், அவற்றின் மீது ஆர்வம் கொண்டு பார்த்தும், வியந்தும், பாதுகாத்தும் ஆராய்ச்சி செய்தும் வந்திருக்கிறார்கள். (Central archaeological survey of India) மைய அரசு அகழ்வாராய்ச்சித் துறை ஒன்றை நிறுவி அதன் மூலம் ஆராய்ச்சிகள் இன்றும் செய்து வருகிறார்கள். இது போல காசியிலும் அமெரிக்க ஆராய்ச்சி நிலையம் ஒன்றுமுளது. (American Institute of Indian Studies, Varanasi) ஆனால் உண்மை நிலை இன்றும் அவர்களாலும் அறிய முடியவில்லை. இதே நிலை தான் பாண்டிச்சேரி French Institute of Indologyக்கும் உளது. எனவே அவையெல்லாம் பிறர்க்குக் காட்சிப் பொருள்களாகவே, தெரிகின்றன.

<u>கவின்கலைகள் எங்கே எப்போது தோன்றின? இன்றைய நிலை என்ன?</u>

பண்டைக் குமரிக் கண்டத்தில் முதல் சங்ககாலத்தில் தோன்றிய இக்கலை மரபு--

செம்மையுற்றதாய் இன்றுவரை உள்ளது. தற்காலத்தில் காவியம் [கவிதைக்கு] நிரம்ப ஆதரவு பெருகி வருகிறது. ஆனால் ஓவியத்துக்கு [சிற்பத்திற்கும் கட்டிடக் கலைகளுக்கும் பொதுப் பெயர் ஓவியம்] அவ்வளவு ஆதரவு இல்லை எனலாம்.

அந்தக் காலத்தில் [பிரளயத்திற்கு (Deluge) அடுத்து வந்த கி.மு, கி.பிகளில்] சிற்பியர்களையும், கைவினைஞர்களையும், ஆதரித்தவர்கள், சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், குறுநில மன்னர்களும் அவர்களுக்குப் பிறகு விஜயநகர மராட்டிய மற்றும் நாயக்க மன்னர்களும், அவர்களைத் தொடர்ந்து செட்டி நாட்டு, முடிசூடா மன்னர்கள் என்று போற்றப்பட்ட தன வணிகர்களும் ஆவார்கள். பொருள் ஈட்ட அயல் நாடுகள் சென்று [சிங்கப்பூர், மலேசியா, பர்மா, இலங்கை] அங்கு ஈட்டிய பொருளில் 12½% தொகையினை [ரூபாய்க்கு இரண்டணா என்ற கணக்கில்] ஒதுக்கி அதில் கோவில்களையும் பல்வேறு திருப்பணிகளையும் கலைப்பணிகளையும் தமிழ்ப் பண்பாட்டையும் இன்று வரை கட்டிக் காத்து வருகின்றனர். இந்திய நாட்டில் மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட அக்கொடை வள்ளல்கள் ஆதரவில் சுமார் 200 ஆண்டுகளுக்கும் மேலாக கலைப்பணி செய்து வந்தவர்கள் இக்காலச் சிற்பிகளின் மூதாதையர் ஆவர். அது மட்டுமல்ல இயல், இசை, நடம் என்ற முத்தமிழையும் கோவிலுக்குள்ளேயே வளர்த்தும் காத்தும் வந்தவர்கள் செட்டிநாட்டுத் தன வணிகப் பெருமக்கள் என்றால் அது மிகையல்ல. இது வெறும் கதையல்ல; புகழுரையும் அல்ல; உண்மை வரலாறு ஆகும். நிற்க, இவர்கள் உதவி இல்லாமல் இருந்திருப்பின் இன்று பெருமைப் பட வைக்கும் தமிழ்க் கலாச்சாரம் மற்றும் தமிழ் இயலும் தமிழ்இசையும் தமிழ் நடமும் பிற தமிழ்க் கலைகளும் மாய்ந்தே போயிருக்கும். அதுவன்றி, இக்கலாச்சாரத்தை உலக கலாச்சாரமாக மாற்றிட அனைத்தும் செய்துள்ளார்கள். நான் செட்டி நாட்டில் பிறந்து வாழ்ந்தவன். எனக்கு வயது 80 பூர்த்தியானதால் எனக்கு ஓரளவு நகரத்தார்களைப் பற்றி நன்றாகவே தெரியும். நான் என்னுடைய வளர்ப்புத் தந்தை (god father) என்று அழைக்கப்பட்டு வந்தவரே நகரத்தார் திலகம் கம்பன் அடிப்பொடி காரைக்குடி சா.கணேசன் ஐயா ஆவார்கள் என்று சொன்னாலே போதும்! என்னைப் பற்றி மேல் விளக்கம் தேவையில்லை என்பேன்.

செட்டிநாட்டு அரசர் ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தான் தமிழிசையின் மறுமலர்ச்சிக்கு மூலக் காரணம் ஆவார். 1943ஆம் ஆண்டு, முதலாவது தமிழிசை மாநாட்டை தேவகோட்டையில் நடத்தினார். அப்போது முதல் கச்சேரியாக ஏழிசை மன்னர் M.K.தியாகராஜ பாகவதரின் கச்சேரியை நிகழ்த்தி ஒரு மகத்தான விழிப்புணர்வை, தமிழிசையின் இனிமையை – மேன்மையை, சிறப்பை பயனை நாடறியச் செய்தவர் மேதகு அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஆவார். அந்த நேரத்தில் நானும் தேவகோட்டையில் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தவன், நேரில் கண்டு ரசித்தவன். பிறகு சிதம்பரத்தில் தமிழிசைக் கல்லூரியை நிறுவி இன்று வரை நடத்தியும் வருகிறார்கள்.

நாடு சுதந்திரம் பெற்று விட்ட காலத்தில்:[1947க்குப் பிறகு] – தொல் கலைமரபின் நிலை:–

கடந்த பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளாக மரபுக் கட்டிடக்கலைக்கும், மரபுச் சிற்பக்கலைக்கும் பேராதரவு நல்கியவர்களில் T.V.S நிறுவன அதிபர் திரு.வேணு ஸ்ரீனிவாசன் அவர்கள் குறிப்பிடத் தக்கவர் ஆவர். வேலூருக்குத் தெற்கே 35 மைல் தொலைவிலுள்ள சம்புவராயர் ஆண்ட படைவீட்டில் 60 கோவில்களுக்கு மேல் கட்டியும், அங்கு வாழ்ந்த ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்கு பல பொது நலத்திட்டங்களை நடைமுறைப் படுத்தியும், கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியும், அப்பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர், பள்ளி, மருத்துவ நிலையம் விவசாய மேம்பாடு, தொழில் வசதி மற்றும் சாலை வசதிகளும் செய்து கொடுத்து அரும்பணி ஆற்றியவர் ஆவார்.

இது போல திருநெல்வேலியை அடுத்த நவதிருப்பதி என்ற ஆழ்வார்கள் வாழ்ந்த புனித ஸ்தலத்தில் 10,12க்கு மேலான கோயில்களையும் புதுப்பித்து உயிரூட்டிய [சான்னித்யம் பெறச் செய்த] பெருந்தகையாளர் திரு.ஸ்ரீனிவாசன் அவர்கள் வரலாற்றில் இடம் பெறத் தக்க ஆன்மீகச் சேவை புரிந்தவர் என்றால் மிகையில்லை. சிற்பிகளை சிறப்பாக ஆதரித்தவர்; மதித்தவர்; கௌரவித்தவர். எதையும் திறம்படச் செய்யும் தொழில் நுட்பம் அறிந்த – மற்றும் ஆர்வங் கொண்டவராதலால் இரண்டு சக்கர ஊர்தியில் கண்ட வெற்றியை – தொழில் மேன்மையை – அதன் பிரதிபலிப்பை – திருப்பணி செய்தலிலும் புகுத்தி பெருமை பெற்றவர். அவர் எடுத்துக் கொண்ட கோவில் பணிகள் யாவும் நிறைவு அடையும் நிலைக்கு வந்து விட்டதால் மரபுத்துறை சார்ந்த சிற்பியர், அடுத்து எந்தத் தொழிலதிபர் வருவார் என்பதை, மழையை எதிர் நோக்கி, காத்திருக்கும் சகோரப் பறவை போல் உள்ளனர்.

Ramco Industries சுப்பிரமணிய ராஜா அவர்களின் மகத்தான ஆதரவு:

இதே போல் அரும்பெரும் ஆன்மிகத் தொண்டும் கலைத் தொண்டும் செய்த பெரியவர் Ramco Industries அதிபர் திருமிகு ராமசுப்ரமணிய ராஜா அவர்கள் என்றால் மிகையல்ல. T.V.Sக்கு முன்னரே கோவில் திருப்பணி செய்தவர். உடனிருந்து உற்று நோக்கியவன் நான். அவருக்கு செய்து கொடுத்து பயனடைந்தவனும் நானே என்பதையும் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அவரும் சேவை செய் ஆர்வத்தில், திருமிகு வேணு ஸ்ரீனிவாசன் அவர்களுக்கு நிகரானவர். நமது ஆன்மிகக் கலாச்சாரத்தைக் காத்திட பல கோவில் திருப்பணிகளைச் செய்து வருகிறார்கள். இன்றும் அன்னாரது ஆதரவு கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே நன்றியுடன் இன்றும் உள்ளேன்.

இந்த நூற்றாண்டில் என்னால் மறக்க முடியாதவர்கள் [1] செட்டிநாட்டு வணிகப் பெருங்குடி மக்கள், [2] T.V.S திரு. வேணு சீனிவாசன் அவர்கள், [3] Ramco Industries திரு. ராமசுப்ரமணிய ராஜா அவர்கள் [4] மற்றும் இத்தகைய ஆன்மிகக் கலைசார் பொது நலத்

தொண்டாற்றி வரும் வள்ளல் பெருமக்கள். இதற்கு மேல்வரும் புதிய செய்திகளை இனிக் காண்போம்.

தமிழக அரசு சிற்பக்கலை மரபுக்கு ஆதரவுக் கரம் நீட்டிய நன்னாள்:

மாமல்லபுரத்தில் அரசினர் கட்டிடக் கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியை 13.03.1957அன்று துவக்கி வைத்தவர் மாண்புமிகு அமைச்சார் பக்தவத்ஸலம் அவர்கள் ஆவார். இது நமது தமிழ்நாடு அரசின் தீர்க்க தரிசனம் எனலாம். மறையும் நிலையில் இருந்த கலைமரபு இதனால் புத்துயிர் பெற்றது என்பதே வரலாறாகும். அந்த நேரத்தில் மாண்புமிகு காமராசர் அவர்கள் முதல்வராக இருந்தார்கள். அவரது ஆசியும், ஆதரவும் இக்கலைக் கல்லூரிக்கு நிரம்பக் கிடைத்தது என்பது குறிப்பிடத் தக்கதே. [இராஜாஜி அவர்களின் ஆசியும் ஆதரவும் ஆட்சியில் இல்லாத போதும் இக் கல்லூரிக்குக் கிடைத்தது. அவர்தம் ஆட்சிக் காலத்தில் இராஜாஜி அவர்களின் தலைமையில் நிகழுந்தி பணி தான் "காந்தி நினைவு மண்டபம்"].

அரசு ஆதரவு:[டாக்டர் கலைஞர் அவர்களின் பங்களிப்பு] அவர் ஏற்றிய புதிய விளக்கு, காட்டிய புதியபாதை [1969 - 2007]:-

சுகந்திரம் அடைந்த பிறகு தமிழக அரசு கட்டிய பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக் கூடங்களும், பூம்புகார் கலை எழில் மிகுந்த மன்றங்களும், தனிப்பெரும் புகழ் பெற்ற மாதவி சிலையும், சென்னை வள்ளுவர் கோட்டமும், அதில் செதுக்கி வைத்த 133 குறள் சிற்பங்களும் காரைக்குடியிலும் மதுரையிலும் நிறுவிய தமிழ்த் தாய் [கவிதை வடிவம்] தேரில் அமர்ந்த வடிவமும் தேரும், பாஞ்சாலக் குறிச்சியில் வீரபாண்டிய கட்ட பொம்மன் கோட்டையும், சிலையும், கன்னியாகுமரியில் 133 அடி உயர அய்யன் வள்ளுவர் சிலை ஆகிய பணிகளை செய்திட்டவர் மூதறிஞர் ஐந்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆவார்கள். இவர் கொண்டிருந்த தமிழ் மொழிப் பற்றும், தமிழ்க் கலைப் பற்றும், தமிழ் இலக்கியப் பற்றும், தமிழனப் பற்றும், வரலாற்று ஞானமும், நிர்வாகத்திறனும், ஒரு புதிய கலைப் பாதையை - [இலக்கியப் பாதையை] - இம்மரபுக்கு வகுத்துக் கொடுத்ததை எவரும் மறுப்பதற்கோ மறைப்பதற்கோ இயலாது. மரபுக் கலைக்குக் கிடைத்த ஒரு மாபெரும் புதிய திருப்பம். காவிய மரபின் வழிவந்த தொல்கலை மரபு பெருமை மிக்க தனது பாரம்பரிய நிலையை அடைய டாக்டர் கலைஞர் - அவர்கள் தான் காரணமாவார். கடவுள் வடிவங்கள் எல்லாம் கடவுளைப் பற்றிய விஞ்ஞானக் கருத்தோவியம் தானே. Illustrative forms of Scientific phenomena என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

சிற்பக்கலையின் - புதிய பாதைக்கு - கவிதைப் பாதைக்கு கலைஞர் அவர்கள் போட்ட அஸ்திவாரம் நிலையானதும் உறுதியானதும் ஆகும். இது தான் நம் தமிழக நாகரிகத்தை பிரதிபலிக்கும் பாதை. இது தொடர வேண்டும் என்பது நம் எல்லோரின் அவாவும் கோரிக்கையும்! அடுத்து என்ன விந்தை செய்யப் போகிறார்கள் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு. இன்னும்

ஒரு சில வள்ளன்மை கொண்டவர்களின் தொண்டுள்ளத்தால் மரபுக்கலைத்துறை தொய்வில்லாமல் காணப்பட்டாலும், ஒட்டு மொத்த நிலை இன்று திருப்திகரமாக இல்லை.

"பரம்பொருள் எங்கும் உண்டு பெருங்கலை யாண்டும் உண்டு" என்றான் மயன் என்ற சங்க காலச் சிற்பச் சித்தன். இந்தப் பொன் மொழியை – பொய்யா மொழியை அரசு மூலம் காத்திடும் வாய்ப்பும் பொறுப்பும் மேதகு கலைஞர் அவர்களேயே சாரும். நல்லன எதிர்பாக்கிறோம். **"அயன் படைப்பு மாறுமே; மாறாதே மயன் படைப்பு"** என்றும் அவனே [மயனே] சொன்னான். காவியத்தையும் ஓவியத்தையும் நினைத்துப் பேசிய மயன் கூற்று இஃதாகும். சிற்பக்கலை மரபு பற்றி மேலும் பேசிடும் மயன் சொல்வான் **"ஓவியத்தில் காவியமும், காவியத்தில் ஓவியமும், ஓவியக்காவியம், காவிய ஓவியம்"** என்றெல்லாம் தமிழ்க் கலாச்சார வேர்களைக் காட்டுவான். உண்மையைச் சொன்னால், இந்தக் கலைமரபின் உண்மை நிலை அறிய [கவின் கலைத்தொழில் மரபில் பணியாற்றும்] மக்களின் – கணக்கு [சென்ஸஸ்] எடுத்து, வறிய நிலையில் வாழும் கலைமரபுசார் குடும்பங்களுக்கு தமிழக அரசு தக்க நிதி உதவிகள் அனைத்தும் அவசியம் செய்திடல் வேண்டும். இக்கலைச் சமுதாயத்தை காப்பாற்றி தற்போதுள்ள தமிழ்நாடு அரசினை நடத்திச் செல்லும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் தான் முடியும். காரணம், அவரும் பரம்பரைக் கலைஞர் அன்றோ!

<u>தமிழ்நாடு minus கோவில்கள் = பூஜ்யம்:</u> (Zero)

இந்த நிலையில் மேலும் ஒரு உண்மையைச் சொல்லப் போகிறேன். Tamilnadu -(minus) Temples = Zero என்று அன்று மேலை நாட்டு ஆய்வர்கள் என்னிடம் ஏளனமாகச் சொல்லுவார்கள். உண்மை யாதெனில், தமிழ் நாட்டில் கட்டப்பட்ட கோயில்கள் வெறும் கல்லாலும் செங்கல்லாலும் கட்டப்பட்ட கட்டிடங்கள் அல்ல. மற்றும் நோயுற்ற (Sick buildings) வீடுகள் மற்றும் கலைக்கூடங்கள் அல்ல. அவைகள் எல்லாம் உயிர்ப்பொருள்களாக, (living organism) ஆரோக்கிய நிலையங்களாக உலக மக்கள் அறிந்து புரிந்து போற்றக் கூடிய விஞ்ஞானச் சூழ்நிலை நிறைந்த இடங்களாக இந்தக் கோயில்களும், பண்டை வீடுகளும் திகழ்கின்றன. இந்த விஞ்ஞானம் மரபுச் சிற்பிகளுக்குத் தெரியும். இன்றும் சிதைந்து போன சில பழங்கோவில்களை நமது தொலைக்காட்சிகள் மூலம் கண்டு வருகிறோம். அவை காக்கப்பட வேண்டும் அவற்றையெல்லாம் UNESCOவிடம் ஒப்படைத்து விடலாம். இதன் **வேர்களைக் கண்டறிய மய விஞ்ஞானி ஒரு கணக்கையும் தொழில் நுட்பத்தையும் நம்மிடம் விட்டுச் சென்றிருக்கிறான்.** மேலெழுந்தவாறு நான் தொட்டுச் சொல்லியிருந்தாலும் உண்மையில் அவை யாவை? பிறகு பார்ப்போம்.

வெளி நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ஆகாய விமானத்தை விட்டு இறங்கியவுடன் நேரடியாக மாமல்லபுரத்திற்கும், தஞ்சைப் பெருவுடையார் கோவிலுக்கும் பிற கோயில்களுக்கும் ஓடிச் செல்லுகிறார்கள். அதனால் சுற்றுலாத் துறை

வளமிக்கதாக ஓங்கி வளர்வதின் ரகசியமும் உண்மையும் இதுவே. போக்குவரத்துப் பெருகி வருவதின் அடிப்படையும் இஃதே. எனவே சுற்றுலாத்துறைக்கு வருவாய் ஈட்டித் தரும் சிற்பியர் சமூகத்திற்கு இந்த வருவாயிலிருந்து (Revenue thro' tourism) நல்ல பல உதவிகளை இந்த அரசும் எந்த அரசும் செய்யலாம். நல்ல பல திட்டங்களைத் தீட்டலாம். அரசை அணுகிட இக்காலச் சிற்பிகள் பயப்படுகிறார்கள். அரசு தானே முன் வந்து சிற்பியர் சமூகத்திற்கு தேவைப்படும் உதவிகள் அனைத்தும் செய்திட வேண்டுகிறேன். 60 வயதைக் கடந்த வறிய சிற்பியருக்கு மாத ஓய்வூதியம் வழங்கிட பரிந்துரைக்கப் படுகிறது.

பழைய மரபு வழிவந்தோரின் 60 வயதைக் கடந்தவர்களுக்கு உதவி நிதி ஒன்றை ஏற்படுத்தி அதனை அவர்களுக்கும் இத்துறை pension போல் வழங்கிடவும், ஒதுக்கிடவும் வேண்டும் என்பது எனது கோரிக்கை. சுற்றுலாத் துறை வருவாயிலிருந்து இதனை வழங்கிடச் செய்யலாம்.

நம்மவர்கள் ஆதரவு தேவை; நேரடித் தொழிலில் இறங்கி பெரும் சிற்பியரோடு [ஸ்தபதியரோடு] தொழில் வாழ்க்கை நடத்தும் கைவினைஞர்கள் (artisans) நிலை:

சிற்பிகளோடு தோளொடு தோள் பற்றிப் பல சிற்பங்களையும், சிற்பக் கட்டிடங்களையும் கட்டி வந்த உதவிச் சிற்பிகளும் அடங்கிப் போய் விட்டனர். காரணம் நல்ல வாய்ப்புகளின்றி, வறுமை கோட்டிற்கு கீழ் இருந்து வருகிறார்கள். எனவே அரசின் உதவி அவசியம் தேவை. இல்லையெனில் நமது தமிழினம் பெற்றுத் தந்த ஆன்மவியல் மறைந்தே போகும். மற்றும் எதிர் காலத்தில் பெரிய - முக்கிய சிற்பக் கலைப் பணிகளுக்கு சிற்பிகள் கிடைப்பது அரிதாகிடும். இதனைத் தமிழினத்தின் கோரிக்கையாக ஏற்க வேண்டும்.

அமைப்பு சாரா தொழில் செய்வோர்: (unorganised labour sector)

இத்துறையின் பெருமையும் தொன்மையும் ஒருபக்கம் இருக்க, இத்துறையில் பணியாற்றும் தொல் இனத்தினர் இப்போது சிதறிப் போய் உள்ளனர். ஒரு நாள் ஊதியமாக [சிற்பிகளுக்கு] அதிகப் பட்சம்ரூ.160/- கிடைக்கிறது. உணவுச் செலவு தினசரி 30 ரூபாய் ஆகிறது. இது பிரத்தியேகமானது. அதுவும் சிற்ப வேலை இல்லை என்றால் இந்த வருவாயும் அவர்களுக்குக் கிடைப்பதிற்கில்லை. கைத் தொழிலாகவே (Handicrafts) சிற்பங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

அய்யன் வள்ளுவர் சிலை வழியாக மட்டும் வருடம் ஒன்றுக்கு ஒரு கோடிக்குக் குறையாமல் தமிழக அரசுக்கு வருவாய் கிடைப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. [பூம்புகார் கலைக் கூடங்கள் வள்ளுவர் கோட்டம் தவிர்த்து] இதனையும் பயன்படுத்தலாம். விவேகானந்தர் நினைவாலயம் வருவாயிலிருந்தும் ஒரு பகுதி பெற்றுப் பொது நிதி ஒன்றை ஏற்படுத்தலாம். இதை வைத்து நலிந்து கிடக்கும் கோயில்களை புதுப்பிக்கலாம். PWD போல TWD (Temple works

Department) என்ற புதுத்துறை ஒன்றை அமைக்கலாம். T.V.S அதிபர், Ramco Industries அதிபர், தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் ஐயா போன்ற அருட் செல்வர்களுக்கும் நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கும் அத்துறையில் முதலிடம் கொடுக்கலாம். (by nomination) கலைத் தொழில் மீதும், கலை மரபின் மீதும், தூய பற்றுடைய, ஏழைச் சிற்பிகள் மீது இரக்கமுடைய, வாழ்வளித்த ஸ்தபதிகளையும் அமர்த்திக் கொள்ளலாம். நாடும் வீடும் செழிப்புறுமானால் தான் கலைகளும் ஓங்கிடும் என்பது தானே நமது நாட்டின் கலைக் கதையும் வரலாறும் ஆகும்.

இக்கால சிற்பியர் தம் ஊதியத்தில் 12½% P.F க்காக நிதி ஒதுக்கிடு:-

குறைந்த வருவாய் வாங்கும் சிற்பப் பணியாளர்களிடமிருந்து 12.5% ஊதியத்தை பிடித்தம் செய்து, பணி தரும் ஸ்தபதிகள் (employer) 12.5 % சேர்த்து P.F சேமிப்புத் தொகையாக மைய அரசுத்துறைக் கணக்கில் செலுத்த வேண்டுமென்று சில அதிகாரிகள் ஸ்தபதிகளிடம் வந்து போகிறார்கள். போதிய வாய்ப்புக்கள் கிடைக்காமல் சிற்பிகளும், ஸ்தபதிகளும் திண்டாடும் நிலையில் ஸ்தபதிகள் தயாரிக்கும் மதிப்பீட்டில் P.F தொகை சேர்த்து மதிப்பீடு கொடுத்தால் வேலை கொடுப்பவர்கள் திணருகிறார்கள். வேலை மறுக்கப்படும் நிலை உருவாகி வருகிறது.

P.F12.5% பிடித்தத்தை நீக்கிடல், கலை நிறுவனங்களைச் செய்வோரிடம் நிதி பெறுதல்/ சேமிப்பிலிருந்து ஒதுக்கிடும் நிதிக்கு வரிவிலக்கு அளித்தல்:

ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமான வரித் தொகை செலுத்துவோரிடம் 1% தொகை வசூலித்தால் அரசுக்குக் கூடுதல் தொகை வசூலாகும். இதனால் அரசுக்கு பிரத்யேகமான பாரம் [பளு] ஏதுமில்லை. கோவில் வருவாயிலிருந்து [உண்டியல்] ஒரு அரசுத் துறையே செயல்படத் தானே செய்கிறது? ஸ்தபதியர் மற்றும் சிற்பியர்களுக்கு சேம நல நிதி பிடித்தத்திலிருந்து விலக்கு அளிக்கலாம். இதனால் சிற்பத் தொழில் தொய்வுறாது நிகழக் கூடும்.

ஆகையினால், அமைப்புசாரா (Handicrafts) கைத்தொழில் புரியும் கலை மரபுசார் இனத்தைக் காப்பாற்ற சிற்பிகளிடமிருந்து P.F என்ற சேமிப்புத் தொகை பிடிப்பதைக் கைவிட்டு விடவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்க வேண்டுகிறேன். தக்கோருக்கு தக்க பரிந்துரை செய்திடல் வேண்டுமாறும் கோருகிறேன். தொன்மைத் தமிழரசுகள் மரபுச் சிற்பிகளுக்கும் காவியக் கலைஞர்களுக்கும் வரிவிலக்கு அளித்ததாக ஒரு கல்வெட்டுச் செய்தியும் உண்டு.

P.W.D போல T.W.D என்ற புதிய இலாக்காவை தொடங்குதல் (for not only Temple Architecture but also for Traditional (Vaastu) Housing Architecture)

பொதுப்பணித்துறை வாயிலாக கட்டப்பட்டு வரும் கட்டிடப் பணியில் சிற்பிகளுக்கு கட்டிட மதிப்பீட்டில் 2% பணி ஒதுக்கி வைக்கச் சொல்லி, இந்த ஆணையை நான் மாமல்லபுரக் கல்லூரியின் முதல்வனாக இருந்த போதே வெளி வந்தது. இதைத் தீர்க்க தெரிசனத்தோடு செய்தவர் தான் மூதறிஞர் ஐந்தமிழ்க் கலைமரபுக் காப்பாளர் டாக்டர் கலைஞராவார்கள். அவர்

ஒரு Creative administrator and creative artist and Director என்பது எனது கணிப்பு. ஆனால் அஃது நடைமுறைப் படுத்தப் படவில்லை. இதனை தற்போது மறு பரிசீலனை செய்து P.W.D மதிப்பீட்டில் 4% பணி ஒதுக்கீடு செய்தால் சிற்பிகளுக்கு அதிக வேலை கிடைக்கும். வருவாய் கூடும். இதை தமிழக அரசு ஏற்று தக்க ஆணை பிறப்பித்தால் டாக்டர்.கலைஞர் பெயர் பல்லாண்டு அல்ல, பல்லாயிரத்து நூறாண்டு நிற்கும், சிற்பியர், ஸ்தபதியர் குடும்பங்கள் அவரை வாழ்த்தி நெஞ்சில் நிறுத்தும் என்று உறுதிபடக் கூறுகிறேன்.

Public works Department போல கலைசார் தொழில்களுக்கு TWD (Temple works Department) என்ற ஒரு Department ஐ தொடங்க வேண்டும் என்பதையும் வேண்டிக் கொள்கிறேன். மாமல்லபுரக் கல்லூரியின் தரத்தையும் மேலாண்மையையும் அதனிடம் ஒப்படைக்கலாம்.

சிற்பியர் இனத்தை மிகவும் பிற்பட்டோர் இனமாக அறிவிக்க வேண்டி:

மேலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினற்கு (MBC) அரசு அளித்து வரும் கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றுக்கான இட ஒதுக்கீடு இந்த சிறபத் தொழில் புரியும் சமுதாயத்தினருக்கும் கிடைத்திட டாக்டர் கலைஞர் அவர்கள் ஆவன செய்திட வேண்டுமென்பது நீண்ட கால கோரிக்கை இன்னும் நிலுவையில் உள்ளது. இதற்கும் டாக்டர் கலைஞர் அவர்களின் கடைக்கண் பார்வை விழ வேண்டும் என்று கோருகிறேன். இதற்கு சிற்பியர் மக்கள் தொகை கணக்கு எடுத்தல் தகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இது முக்கியமாகும்.

இந்திய கலாச்சார வேர்கள் என்பவை உண்மையாக எங்கே உள?

இவை அனைத்தும் சொல்லிய பிறகும், மேலை நாட்டினர் 300 ஆண்டுகளாக நம் நாட்டில் அதிகாரத்தோடு வசித்து வந்தும், இடைஇடையே திரும்பிச் சென்றும் இருக்கிறார்கள். இந்த நிலையில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த நாட்டின் உண்மைக் கலாச்சாரம் புராணங்களிலும், இதிகாசங்களிலும் காணப்படாது. இக்கலையில் அடிப்படையாக விளங்கும் அறிவியல் நுட்பம் ஒன்று உண்டு என்று பல காலும் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். இத்தகைய காவியங்களை ஆண்டாண்டு காலம் படித்தும் வருகிறோம். பெரும்பாலும் அவை புனை சுருட்டுகளாகவே புலனாகின்றன. எனவே அந்தப் படிப்பு பயனற்ற படிப்பாகும். அந்தப் படிப்பு என்ன என்று மேலை நாட்டினர், குறிப்பாக தமிழ் நாட்டிற்கு ஏன் வருகிறார்கள் என்ற வினாவின் விடையாக இல்லை. வடநாட்டைக் காட்டிலும் தென்னாட்டில் தான் இந்த ஆன்மீக அறிவியற் செல்வம் மலிந்து கிடக்கிறது. பொய் புரட்டுகளை நீக்கி விட்டு, தொடர் சிந்தனையில் ஆழ்ந்தால் ஓரளவு இந்திய– தமிழக கலாச்சார வேர்களைக் காணலாம். இலக்கியங்களைக் காட்டிலும் Technical literature ஆகிய வாஸ்து சாஸ்திரங்களிலும், திருமந்திரம், திருவாசகம், திருவருட்பா போன்ற தமிழ் நூல்களிலும் கொட்டிக் கிடக்கின்றன; சீண்டுவாரில்லை.

பிரம்மம் அறிவியல் மயமே என்கிறது வேதம் மேலும் ஞானமயம், உணர்ச்சிமயம், சில்பம் என்பதும் விஞ்ஞானச் சிறப்பே, உலகப்பொருள் அனைத்தும் விஞ்ஞானத்தின் சிறப்புத் தோற்றங்களே, வேதம் நிகர்த்த பிற சாஸ்திரங்கள் விளக்கம் தருகின்றன. " विज्ञानं ब्रह्म, ज्ञानमयं ब्रह्म, प्रज्ञानं ब्रह्म, विज्ञानं शिल्प कौशल्यम्, (कुशलम्) जगत् सर्वं शिल्पमेव ॥". இந்த அடிப்படை ஆன்ம விஞ்ஞானத்தை தமிழில் சொல்லிப் பார்த்தேன். எழுதியும் பார்த்தேன். ஒரு சிலரைத் தவிர பலருக்கு படித்துப் புரிந்து கொள்ள ஆர்வம் இல்லை. நேரமும் இல்லை. இந்த நிலையில் அருட்செல்வர் மகாலிங்கம் ஐயா அவர்களை அணுகினேன். அவர் சொன்ன அறிவுரையைச் சொல்லுகிறேன். "இப்பேர்ப்பட்ட விஞ்ஞான கருத்துக்களை ஆங்கிலத்தில் சொன்னால், அதனை வாங்கிப் படிப்பவன் ஆக நம் தமிழன் தான் முதல்வானாக இருப்பான். தமிழில் எழுதினால் தமிழனே இப்போது வாங்க மாட்டான். படிக்கவே மாட்டான். எனவே அறிவியல் நூல்களை தமிழில் இப்போது எழுதுவதை தவிர்க்குமாறு சொன்னார். எனவே ஆங்கிலத்திலே எழுதுக என்று அறிவுரை நல்கினார்கள். இதைக் கேட்டபின் நான் எழுதிய 32 நூல்களில் (books and booklets) முக்கியமானவற்றை ஆங்கிலத்தில் எழுதினேன். தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ள மக்களுக்காக சுமார் 400க்கும் மேற்பட்டு சொற்பொழிகளும் கலந்துரையாடல்களும் நிகழ்த்தியுள்ளளேன். நம்மவரில் ஒரு சிலர், வாங்கினாலும் பேச்சைக் கேட்டாலும் இதுவும் புரியவில்லை என்பர். காரணம், மேலை நாட்டு கலாச்சாரத்தையே காதலித்து பெருமைப் படுத்திப் பேசுகிறார்கள், பார்க்கிறார்கள். அதையே பசி தீர்க்கும் படிப்பாக மாற்றப் பட்டு விட்டதாக கருதுகிறார்கள். பெரிதென நோக்குகிறார்கள். பணிவாய்ப்புக்கள் மேலை நாட்டுப் படிப்பிற்கெனவே ஆகி விட்டன என்பதே காரணமாகத் தெரிகிறது. இது வருந்தத் தக்கது தான். என்றாலும் விரைவில் நம் நாட்டின் பொருளாதார நிலை உயரும், அதன்பின் உலகமே இந்தியாவில் சிறப்பாக தமிழ்நாட்டடையே நோக்கி வரப் போகிறார்கள் என நினைக்கிறேன். அத்தனை சிறப்பு விஞ்ஞானம் நம்மிடம் உளது.

<u>வாஸ்து மரபு கொண்டுள்ள அதிசய விண்ஞானமும், விஞ்ஞானமும், தொழில் நுட்பமும்:-</u> (Spatial, material and technological sciences)

நான் கூறிய அந்த விஞ்ஞானம் என்ன என்பதைப் பற்றி சுருக்கிக் கூறுகிறேன். முதலில் தமிழிலும், பிறகு ஆங்கிலச் சொற்களைக் கொண்டும் சொல்லுகிறேன்.

இப்பொழுதெல்லாம் வாஸ்து, (matter) வஸ்து (energy) என்ற சொற்கள் வெகுவாக பேசப்பட்டு வருகின்றன. காரணம் தமிழக்கும், சம்ஸ்கிருதத்திற்கும் இது சொந்தமானது. பண்டைத் தமிழர்கள் இருமொழிகளையும் நன்கு அறிவர். அறிந்திருந்தால் தான் பண்டிதர் என்று மதிக்கப்படுவர் அங்ஙனம் அறிந்தவர்களே மகாமகோபாத்யாயர் பட்டம் வழங்கப் பெறுவர். தொழில் அறிவும் ஆற்றலோடும் சிற்பிகளுக்கு Technical Sanskrit தெரியும். இதற்குத் தான் "கிரந்தம்" என்று பெயர். சிற்பிகள் இயற்றிய நூல்கள் இவையெல்லாம் ஸ்தாபத்யவேதம்,

பிரணவ வேதம், ஐந்திறம், திருமந்திரம் ஆகியவை சிற்பிகள் இயற்றியவையே. புராணங்களை சிற்பிகள் எழுதவில்லை. "வஸ்துவே வாஸ்துவாகிறது"(energy matemorphoses into matter) என்பது நுட்பம். இந்த இரண்டு மொழிகள் தோன்றிய இடம் தான் குமரிக் கண்டமாகும். இதுவே எனது 50 ஆண்டு கால ஆராய்ச்சியின் முடிவு. எனக்கு வயது இப்போது 80 ஆகிறது. ஒரு பாற்கோடா ஆய்வு செய்தோனின் முடிவு என்றும் இதனைக் கூறலாம். ஏற்கலாம். எனக்கு இரண்டு மொழிகளும் தெரியும். அதோடு Technical Sanskrit, Technical Tamil ஓரளவு நன்றாகவே தெரியும். இது தெரியாதோர் கலாச்சார வேர்களைக் காணமுடியாது. இதனால் பொய் மலிந்த உபந்யாசங்கள் அலங்காரப் பேச்சுக்கள் எழுத்தோவியங்கள் பெருகி விட்டன.

இதனை ஆங்கிலத்தில் சொல்கிறேன். The Vastu science is a Science of Energy and Matter, Time and Space, Light and Sound, Rhythm and form, Nama and Rupa, இப்படிச் சொன்னால் புரிகிறதா? நிச்சயம் புரியாது. புரிந்தால் சந்தோஷமே. இது தமிழனின் சொத்து. இச் சொத்தின் மதிப்பும், பெருமையும் புரியாமல் நிரம்பப் பேர் இருக்கிறார்கள்.

நம் பூமியில் பார்க்கும் எல்லாப் பொருள்களும் உயிர்ப்பொருள்களாகும். சத்துப் பொருள்கள் தாம். அசத்து என்பது ஏதும் இல்லை. கல்லும் மண்ணும் சத்துப் பொருள்கள் தான். கல் என்பது கருக்கல் என்பதே அறிவியல் பெயர். கருங்கல் என்பது நிறத்தால் சொல்லப்பட்ட பொருள். நிறம் எதுவாக இருந்தாலும் நுண் அணுக்களால் ஆன பருப்பொருள் என்பதே அறிவியல் நுட்பம். இதிலும் கற்களில் ஆண், பெண், அலி என்ற பிரிவுகள் உள. இது போல மரத்திலும் ஆண் பெண் அலி என மூன்றும் உண்டு. எறும்பு முதல் யானை வரை தத்தம் அகத்திலேயே ஆன்ம சக்தி குடி கொண்டுளது. இது உள்ள பொருள் உயிர்ப்பொருள் என்று சொல்லப்படும். அந்த அரிய ஆன்மீகப் பொருள் (Spirit) என்ற நுண்பொருள் எறும்பின் உள்ளத்திலும், யானையின் உள்ளத்திலும் ஒரே மாதிரி குடி கொண்டிருக்கிறது. செடி, கொடி, மரத்திலும் அடங்கிச் செயல்படுகிறது. தோற்றம், [நிலைத்து] நிற்றல் இறுதியில் மறைதல் என்ற மூன்று நிலைகள் உயிரினங்களுக்கெல்லாம் ஒன்றே என்க. இவையெல்லாம் எங்கிருந்து தோன்றின? நிற்க. இடையே Spirit என்றும் Life என்றும் இன்று சொல்லப்படும் தத்துவம் பற்றிய ஒரு நுட்பச்செய்தியும் தமிழில் உண்டு. நுற்பமே சிற்பமாயிற்று?

இது பற்றி ஒரு Muslim prophet –கலீல் ஜிப்ரான் என்பவர் வேறொரு கோணத்திலிருந்து இதையே சொன்னாலும் இஃது ஒரு universal truth [அ] வேதநிகர் கூற்று எனலாம். அது என்ன? இப்போது பார்ப்போம். "Your children are not your childern. They are the sons and daughters of **Life's longing for itself**. They came through you but not from you. They stay with you but they do not belong to you". எவ்வளவு உண்மை? எவ்வளவு தெளிவு? இத்துடன் மேலுமொரு செய்தி, யாதெனில் நமது தமிழ் விஞ்ஞானத்தையும், தமிழ்மொழி வழி பிறந்த விண்ஞானத்தையும் சுட்டிக் காட்டுவதையும் அதனைப் பிற அறிவியலாளர் சொல்வதையும் நோக்குக.

SACRED GEOMETRY

Readers have to go deep into the observations of Dr.Robert Lawlor. It is very siginificant that Dr.Lawlor has identified the roots of the ancient scriptures on Vaastu, in the science of rhythm and form, which fact, the 'sthapati' has been repeatedly mentioning all over the treatise on Sthapatya Veda. It is hoped that the local scholars would feel free to accept and applaud the efforts of the 'Sthapati', to expose the root-source of this indigenous science.

“The fundamental nature of the material world is knowable only through its underlying patterns of wave forms”.

“Both our organs of perception and the phenomenal world, we perceive of **form** and **proportion**. Therefore, when many ancient cultures chose to examine reality through the **metaphors of geometry and music (music being the study of the proportional laws of sound frequency) they were already very close to the position of our most contemporary science”.**

“The point of view of modern ‘force-field’ theory and wave mechanics corresponds to the ancient geometric - harmonic visions of universal orders as being an interwoven configuration of patterns”.

Robert Lawlor quotes Bertrand Russel in this connection as saying “what we perceive as qualities of matter, are actually differences in periodicity”.

— **"Sacred Geometry"**
by Dr.ROBERT LAWLOR
Architect & Scientist of Australia.

இது போல இறைவடிவங்களை உணர்ச்சி மயமான – குண வடிங்களாக குணச் சித்திரங்களாக இயற்றுகிறோம்.

விண்ணே மண்ணாகிறது என்ற உச்ச அறிவியல் நுட்பத்தில் இறுதியில் நிலைத்திருப்பது விண்ணே. விண் பொருளாக மூலத்திலிருந்து மண்பொருளாக மாறுவது ஒரு விஞ்ஞான நிகழ்ச்சியென தமிழ்மரபு சொல்லுகிறது. உயிர் விண்பொருள்; உடம்பு மண் பொருள். இதுவே

உயிரின் விண்ணின் இயல்பு. உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்பது இலக்கணம். மெய்யொளி உயிரொலி சிவணுதல் இயல்பே என்பது உச்ச விஞ்ஞானச் சொல். வேறெந்த தொல்மொழியிலும் இது தோன்றியதாக குறிப்பு இல்லை. மூலப் பொருள் ஓம் தான். இந்த ஓம் என்ற முழு முதற் பொருள், ஒலி, ஒளி ஆகிய இரண்டு பொருள்களால் ஒன்றித்த ஒன்றியப் பொருள் ஆகும் என்று தமிழ் மரபில் பேசுகிறது? இதில் மிகையும் உண்டு குறையும் உண்டு தான். நல்லன அதிகம் உண்டு தான். (Replicated form of inner vision).

<u>நமது மயன் சொல்லுகிறான் கட்டிடக்கலையே கணக்கியல் உச்சி; காலக்கூறே கணக்கியலாகி என்று / space time units என்பது ஆங்கிலச் சொல் வழக்கு. தமிழில் இது இடங்காலக் கணக்கு என்று சொல்லப்படும் இது மயத்தமிழாகும் என்க.:</u>

ஆனால் இவையெல்லாம் ஆத்மா என்று [அது+மா=ஆத்மா] உபந்யாசகர் சொல்வார்கள். உங்களுக்கும் தெரியும்; அப்பொருள் மூலத்தில் ஒன்றெனினும் அப்பொருள் ஐம்பெரும் பொருள்களாக வெளிப்படுகின்றது என்று சொல்லப்படுகிறது. அவையாவன "வெளி, வளி, தீ, நீர், நிலம்" என்னும் ஐம்பெரும் பொருள்களாகும் (gross elements). இதற்கு மேலும் உண்டோ எனில், ஆம், மூன்று முக்கியப் பொருள்கள் (subtle elements) இருக்கின்றன. அவையாவன முறையே ஏற்கனவே சொன்ன [உள்ளிருந்து வெளியாகும்] ஒலி (Sound), ஒளி (Light), என்று சொல்லப்பட்டு இறுதியாக காலம் (Absolute Time) என்று சொல்லப்படும் எல்லாவற்றையும் தாங்கி நிற்பதும், எல்லாவற்றுக்கு மூல ஆற்றல் ஆக இருப்பதும் காலமே. [காலசக்தியை] ஆற்றலை இப்படி இந்த வாஸ்து விஞ்ஞானம் சொல்லியதோடு விட்டு விடாமல், காலத்தின் ஆற்றலிலிருந்து வெளிப்படுவது துடிப்பு என்று எளிமை படச் சொல்லுகிறது. இதனை ஆங்கிலத்தில் Pulse என்றும் Vibration என்றும் சொல்லலாம். மாதிரை – மாத்திரை – என்பர், பேரலை என்பர் தமிழ் மக்கள். இத்தகைய துடிப்பைச் செல்போனிலும், கம்பியூட்டரிலும் இருப்பதாக இன்று சொல்லி வருகிறோம். இந்தக் காலத்தையே கடவுளாக – காலமாக் கடவுளாகத் தமிழ் மரபு கொண்டுளது. உண்மை தான். [ஆனால் வழக்கில் இருக்கும் Computer க்கு ஆத்மா இல்லை. சிருஷ்டிக்கும் ஆற்றல் இல்லை. Human Computer க்கு creative sense and power உளது. இதுவே பரமாத்மாவின் இயல்பு – ஜீவத்மா என்ற பெயர் கொண்ட நுண்பொருள் நம் அகத்தே உளது. ஒரு சிற்றணு தான் ஜீவாத்மா – உயிர்ப் பொருள் என்பதே அர்த்தம்.] சுருக்கிச் சொன்னால் கம்பியூட்டர் என்ன வேலை செய்கிறதோ அந்த வேலையைத் தான், கூடுதலாகச் (human spirit) செய்கிறது. இதையே இந்த வாஸ்து சாஸ்திரமானது வெளிப்படுத்துகிறது. ("Absolute Time creates life."என்று ஆங்கிலத்தில் சொன்னால் இப்போது புரியும்.) இது சிற்பங்களிலும், கட்டிட வடிவங்களிலும் கணக்கிடப் பட்டு, அடக்கப்பட்டு அவற்றை எல்லாம் இக்கணக்கு இயக்குகின்றது; எல்லாம் இதனால் இயங்குகின்றன என்று அனுபவ ரீதியாகச் சொல்லப்படுகின்றன. இது தான் மய விஞ்ஞானமாகும். இதனை digital

language எனலாம். தொடக்கத் துடிப்புத் தான் ஓம் என்ற monosyllabic sound ஆகும். இதனைத்தான் energy point என்றும் ஒளிப்புள்ளி என்றும் பிரம்மபிந்து என்றும் சொல்லுகிறோம். இப்புள்ளிகளின் தொடரை (Linear form) கோடு என்றும், வரை என்றும், வரைவு என்றும் சொல்லிவருகிறோம். இதையும் கட்டுப்படுத்தி சீர்மிகு ஒலிக்கோடுகளாக்கினால், Rhythm ஆகி விடுகிறது. ஒரு கட்டுக் கோப்பு நிகழ்ந்து விடுகிறது. சீலமிகு – சீர்மிகு இக்கோலத்திற்கு Space Rhythm என்று பெயர். ஆங்கிலத்தில் Rhythm bound (disciplined beats) என்றும், தமிழில் நெறிப் படுத்தப்பட்ட துடிப்பு என்றும், ஜியோமிதி வடிவில் Energy grid என்றும், தமிழ்க் கலையில் புனிதமா நெறி (Sacred order) என்றும் சொல்லுகிறோம். இப்படி சக்திமயமாகத் தோன்றி உருப் பெற்ற – வெளிப்பட்ட மொழியும், எழுத்தும் script and sound என்று சொல்லி எழுத்தெல்லாம் ஓவியம் என்று விளக்குகிறது நமது தமிழ் மரபு. உயிர்ப் பொருள்கள் அத்தனையும் இப்படித்தான் தோன்றின, இப்படித் தான் செயல்படுகின்றன (Vibrate) என்று இந்த வாஸ்து விஞ்ஞானம் சொல்லுகிறது. இதனை அகத்தில் புரிந்து கொண்ட தொல்பழம் இலக்கண ஆசிரியர்கள் "உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்றும் [நமது கலைத்துறை ஆசிரியர்கள்] "மெய்யொளி உயிரொலி சிவணுதல் இயல்பே" – [ஐந்திறம் – 166] என்றும் ஒரு விஞ்ஞானக் கணக்கைக் [காலக் கணக்கை Space time units] கூறுகிறார்கள். அந்தத் துடிப்புக் கணக்கை வைத்துத் தான் இறைவன் வடிவத்தை சக்தி மய வடிவத்தை சிற்பிகளாகிற நாங்கள் செய்கிறோம். இந்தத் துடிப்புக் கணக்கு இன்றும் சிற்ப நூல்களிலும் இசை நூல்களிலும் இருக்கின்றன. எவரும் ஊன்றிக் கவனித்ததாகத் தெரியவில்லை. தாளக் கணக்கு தான் காலக்கணக்காகும். இது இக்கால Computer ல் இயங்கி வருகிறதல்லவா! இதனை உருவத்தின் மூலம் மீண்டும் விளக்குவேன். [ஸ்தபதியின் சிற்பச் செந்நூலில் காண்க 1976]

இந்த இடத்தில் கூத்தாடும் நடராச வடிவத்தை மனத்துள் நிறுத்திப் பாருங்கள். இவ்வடிவத்தில் மேற்கரங்களில் ஒலியும், ஒளியும் [துடியும் தீயுமாக] உள எனலாம். இவை காலசக்தியால் இயக்கப்படுவதால், நெறிப்படுத்தப்படுவதால் அந்தக் கால சக்தியை கூத்தாடும் நடராசன் காலால் மிதித்து, Control பண்ணி, rhythm உண்டாக்குகிறான். இப்படி தாளால் [கால்] மிதித்து நெறிப் படுத்தப்படும் கால அளவுக்கு தாளம் என்றும், தாளப் பிரமாணம் என்று பெயர். இதே காலப் பிரமாணத்தை இயல், இசை, நடம் என்ற முத்தமிழ் மட்டுமல்லாமல், இடவடிவங்களான (Spatial forms) (Spatial time forms) வீடு, நாடு, நகர, நமது உடம்பும் [இதுவும் built space தான்]. நான் சொல்லிவரும் இடங்காலப் பிரமாணத்தில் அடங்கியிருப்பதைப் புரிந்து கொண்டால், நடராசன் காலிலே போட்டு மிதித்து ஆடும் நிலையில் அவன் Rhythm என்ற ஒரு கட்டுப்பட்ட – காலக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட – தாளத்திற்கு உட்பட்ட இசை வடிவங்களாகவே அனைத்துப் பொருள்களையும் ஆக்கி, காலன் என்ற பெயரையும் சிவன் பெறுகிறான்; அதாவது படைக்கிறான் என்பது பொருள். இது தான் பிரபஞ்ச சிருஷ்டி ரகசியம். இதைத் தெரிந்தோன் யாராயினும் அவன் விசுவகர்மன் ஆவனல்லவா! முயனும் அகத்தை,

நடராசன் காலடியில் கிடக்கும் உருவம் காட்டுவதால் அவ்வடிவத்திற்கு முயலகன் என்று பெயராயிற்று. இது தமிழ்ச் சொல் அபஸ்மாரன் என்ற சொல் மிகப் பிழை பட்டது. எனவே நடராச வடிவத்தில் சிருஷ்டிக் கேற்ற நுண் மூலங்கள் சித்தரிக்கப்பட்டிருப்பதால் நடராச வடிவம் மூலச் சிற்பம் – மூல பிம்பம் எனப்பட்டது. நுற்பம் தானே சிற்பம் எனப்படுகிறது?

மரபுக் கவிதை இயற்றவும், கூத்தாடுவதையும் இனிமைப் படுத்துவதை தாளக்கணக்கென்று சொல்கிறோம். மரபில் (Speech rhythm) என்பதும் தாளக் கணக்கே. இதுவே இங்கும் காலக்கெனச் சொல்லப் படுகிறது. அந்தக் காலத் துடிப்பு அருவப் பொருளாம். ஆனால் உணர முடியும். (We can become conscious of its generaion and operation) அந்த அருவப் பொருளாம் விஞ்ஞானப் பொருளிலிருந்து வெளிப்பட்டிருக்கின்றன எண்கள் (Quantifiable numbers) (digital measures) அந்த எண்களே உணர்வு வசப்பட்டு எண்ணங்கள் ஆகின்றன. எண்ணமே வண்ணமும் ஆகின்றன. இதனை விளக்கிப் பேசுவது யாதெனில், காலக்கூறு (Space time Units) என்று வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லப்படும் வாய்பாடு தான். இதோ இந்த இடங்காலக் கணக்குக்கு உரிய பட்டியல். [வாய்பாடு]

Angula Samkhya Table
அங்குல வாய்பாடு

THE UNITS OF TIME AND SPACE
காலம் - இடம் பற்றிய பட்டியல்

Table of Time units
காலக் கூறுகள்

8 Ganam கணம்	1 Lavam லவம்
8 Lavam லவம்	1 Kaashtam காஷ்டம்
8 Kaashtam காஷ்டம்	1 Nimisham நிமிஷம்
8 Nimisham நிமிஷம்	1 Tudi துடி
8 Tudi துடி	1 Kuru கரு
2 Tudi துடி	1 Drutam துருதம்
2 Drutam துருதம்	1 Laghu லகு
2 Laghu லகு	1 Kuru குரு
3 Laghu லகு	1 Puvadam பூவடம்
4 Laghu லகு	1 Kaaka padam காக பாதம்
From :	Taala Deepikai Vol.II of Prof.K.Ramachandran, Sundaram publication, Chennai.

Table of Space units
இடக் கணக்குகள்

8 Anus அணு	1 Car dust தேர்த்துகள்
8 Car dusts தேர்த்துகள்	1 Immi இம்மி
8 Immis இம்மி	1 Ellu (Sesame seed) எள்ளு
8 Ellu எள்ளு	1 Nel (Unhusked paddy grain) நெல்
8 Nel நெல்	1 Viral (Finger measure) விரல்
6 Viral	1 Taalam தாளம்
12 Viral	1 Vitasti விதஸ்தி
24 Viral	1 Thatchu Muzham (Kishku) தச்சு முழம் (கிஷ்கு)
8 Hastam ஹஸ்தம்	1 Dandam தண்டம்
8 Dandam தண்டம்	1 Rajju ரஜ்ஜு
From :	Sthapati's Sirpachennool. Published by the Directorate of Technical Education, Chennai.

Hence Time and Space are equal. காலமும், இடமும் ஒன்றே எனத் தெரிகிறதல்லவா?

''ஏழிசை நுட்பம் ஐந்திசைக் கூறே''

ஒலி அணு

கால வாய்பாடு [துடிக் கணக்கு]

8 அணு	– 1 தேர்த்துகள் காலம்
8 தேர்த்துகள் காலம்	– 1 இம்மிக் காலம்
8 இம்மிக் காலம்	– 1 எள்ளுக் காலம்
8 எள்ளுக் காலம்	– 1 நெல்லுக் காலம்
8 நெல்லுக் காலம்	– 1 விரல் காலம்

கால வாய்பாடு

[பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி மற்றும்
பேராசிரியர் கே.ராமச்சந்திரன் தாளதீபிகை – 2 [1980]

8 கணம்	– 1 லவம்
8 லவம்	– 1 காஷ்டம்
8 காஷ்டம்	– 1 நிமேஷம்
8 நிமேஷம்	– 1 துடி
8 துடி	– 1 குரு

[2 துடி – 1 துருதம்; 2 துருதம் – 1 லகு; 2 லகு – 1 குரு]

''எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி''
எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டுத் தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி என்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருத்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே'' – மயன் ஐந்திரம்

ஓர் ஒளி அணு = ஒரு □ சதுரம்

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு	– 1 தேர்த்துகள்
8 தேர்த்துகள்	– 1 இம்மி
8 இம்மி	– 1 எள்ளு
8 எள்ளு	– 1 நெல்லு
8 நெல்லு	– 1 விரல்

''ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே
நிறையொலி நேரொலி வெளியொலி விண்மொழி

மறையொலி ஓமென வழுத்தற் பாற்றே
மறைமுதல் ஒலி ஓம் அறைதல் மரபே
மொழிமுதல் ஓமென் றுரைத்தல் வழக்கே

அணுத்திரள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம்
வானியல் ஒலியே ஓசை மொழியாய்த்
தானியல் வடிவுறுங் குறியெழுத் தென்ப

குறிகுறி யீடே வரைவென வாகி
அறிநிலை எழுதலின் எழுத்தெனப் படுமே

ஒலியியல் வரிவியல் வடிவியல் உருவியல்
ஒளியியல் ஐந்தாய் உரைக்கப் படுமே
எழுத்தே சொல்லே பொருள்கட் டணியென
வழுத்து மைந்தியல் முறைநெறி வழக்கே

ஐந்தியல் மொழியாய் எண்ணிலை யெழுத்தாய்

வந்ததொல் மரபே முந்துசெந் தமிழாம்'' –[ஐந்திற சூத்திரங்கள்]

கூறியது கூறல் தவறு எனினும், அபூர்வ விஞ்ஞானச் செய்தியை விளக்கிட இஃது அவசியமாகும். Repetion breeds contempt அல்ல; Repetion breeds conpetence என்று சொல்லி வருகிறேன். சரிதானே? "கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி" என்று பேசி [இக்கணக்கைக் கொண்டு / தாளக் கணக்கைக் கொண்டு] வாஸ்து வீடுகளையும், கோயில்களையும், இயல், இசை, நடம் , சிற்பம், கட்டிடம் ஆகிய ஐந்து மரபுக் கலை வடிவங்களையும் இயற்றுகிறோம். இதனால் இம்முறையை சுருக்கமாக ஐந்தமிழ், ஐம்மறைகள் எனச் சொல்லி, இதன் அடிப்படைக் கணக்கை காலக்கணக்காகச் சொல்லுகிறோம். இது தான் தாளக்கணக்கென்று வாஸ்து சிற்ப நூல்களில் மட்டுமல்ல இயல், இசை, நடம் என்ற முத்தமிழிலும் விளக்கப்படுகிறது; பேசப்படுகிறது. இதனைத் தான் வாஸ்து சாஸ்திரம் என்று சொல்லுகிறோம். ஆனால் வேதவியாசன் ஸ்தாபத்யவேதம் என்று உயர்நிலை தந்துள்ளான். வேதம் என்றால் knowledge அல்ல. Wisdom என்பது பொருள். இந்த Vibrational concept ஐ – இந்த விஞ்ஞான நிகழ்வுகளான [அடிப்படையை]க் கொண்டு செய்யப்படும் சிற்பங்களும் உயிர்ப்பொருள்களாகின்றன. கோவில்கள் உட்பட எல்லாம் Energy எனப்படும். வஸ்து வாஸ்துவின் உள்ளில் இருப்பதால், அவை அலை அலையாக உள்ளிருந்து வெளி வருவதால், பெரிய அளவில் உருவான கோவில்களிலே (microcosm / macrocosm) எல்லா இடங்களிலும் பரவி இருக்கின்றன. இவற்றை ஒத்து நாம் நம் இதய அலைகளை வெளிப்படுத்தும் போது resonance [சிவணுதல்] ஏற்படுகிறது. அதாவது 'லயம்' ஏற்படுகிறது. லயம் நிறைந்த இடமே ஆலயம் எனப்படுகிறது. அதாவது அன்பு ஏற்படுகிறது. இது தான் பக்தி எனப்பட்டது. இது தான் காதல் எனப்படுகிறது. இதனை இன்னும் விவரித்து கூறலாம். இப்போது இது போதும் திருமந்திரத்தைப் படியுங்கள்.

இப்பேர்ப்பட்ட விஞ்ஞானத்தை தெரிந்து கொள்வதற்காகவே மேலை நாட்டினர் இங்கே வருகை புரிகிறார்கள். எனவே இத்தகைய விஞ்ஞான மரபை இக்கால சிற்பிகள் 15 ஆயிரம் ஆண்டுகளாக கட்டிக் காத்துக் கொண்டிருக்கின்றனர். இவற்றையும் இவர்களையும் பேணிக் காக்காவிட்டால் நம் தமிழக ஆன்மிக கலாச்சாரம் (Spiritual culture or Scientific Culture of the Tamils) மறைந்து விடும். விசுவகர்ம சிற்பிகள் இம்மரபைக் காத்து விட்டார்கள் என்பதை பெருமை கலந்த அடக்கத்தோடு சொல்லுகிறேன்.

மேலை நாட்டுப் பல்கலைக் கழகம் நம்மிடம் வேண்டுவதும், அதற்காக சுற்றுலா வருவதின் நோக்கமும் இதை அறிந்து கொள்ளவே? மேலை நாட்டு அறிவியலை நம்மிடமிருந்து தெரிந்து கொள்வதற்காக அல்ல:

இந்த உணர்ச்சியை மேலை நாட்டினரிடையே தூண்டி விட்டு இருக்கின்றேன். அவர்கள் நம்முடைய அறிவியல் தொழில் நுட்பங்களையும், உணர்ச்சிகளையும் புரிந்து கொண்டு அமெரிக்காவில், நியூ மெக்ஸிகோ என்ற இடத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பித்து இருக்கிறார்கள். இதற்கு என்ன பெயர் தெரியுமா? **American University of Mayonic Science and technology** என்று பெயர். நான் வைத்த பெயர் தான். இந்த ஐந்தமிழை வளர்ப்பதற்கு நம் நாட்டுப் பொதுமக்களும் அறிஞர்களும் முன் வரவில்லை. வர வேண்டும். நமது கிராமங்களிலும், பழம்பெரும் நகரங்களிலும் தற்போதும் இருப்பது இந்த விஞ்ஞான மரபு தான். கிராமம் அழிகிறது. இந்த விஞ்ஞானமும் அழிந்து வருகிறது. நம் முன்னோர் வளர்த்த ஐந்தமிழ் மரபை கட்டிக் காக்க தமிழ் நாடு அரசு உதவ வேண்டும் என்பது எனது தலையாய கோரிக்கை. உதவும் என்பது என் நம்பிக்கை. இதற்கு U.K யில் உள்ள Prince of Wales school of Architecture முயற்சி செய்து வருகிறது. International Seminar ஒன்றையும் அண்மையில், டெல்லியில் நிகழ்த்தியது. இது prince of walesன் முயற்சியே. அந்நிறுவனத்தோடு தொடர்பு கொள்ளலாம். அமெரிக்கர்கள் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

மாமல்லைக் கல்லூரி உயர்வு பெற ஒரு யோசனை:-

மாமல்லபுர அரசு சிற்பக் கல்லூரியில் படித்துத் தேறிய மாணவர்கள் 1989க்குப் பிறகு நல்ல நிலையையோ, பெயர், புகழ், வருவாய் மற்றும் உயர்வையோ பெறவில்லை. ஒரு காலத்தில் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் தோன்றிய கல்லூரிகளில் தனி முக்கியத்துவம் இக்கல்லூரி பெற்றிருந்தது என்பது எல்லோர்க்கும் தெரிந்ததே. இதனால் நம் அரசு 45 நிலத்தை வாங்கித்

தந்தது. அப்போது பட்டயம் மற்றும் பட்டம் ஆக இரண்டுக்கும் ஒரு சேர வகுப்புகள் நிகழ்ந்தன. செய்முறைப் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. பட்டயப் படிப்பை (Department of Technical Education) நன்கு வளர்த்து வந்தது. தற்போது பட்டய படிப்பு கற்றுத் தரப்படுவதில்லை. பட்டயப் படிப்புப் படித்த மாணவர்களுக்கு செய்முறைப் பயிற்சி சிறப்பாகக் கற்றுத் தரப்பட்டது. பட்டயப் படிப்பு முடித்த மாணவர்களே பட்டப் படிப்பில் சேர்க்கப்பட்டனர். அந்த நிலை மாறி தற்போது பன்னிரண்டாம் (+2) வகுப்பு மாணவர்கள் பட்டப் படிக்கு சேர்க்கப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு போதிய செய்முறைப் பயிற்சி கிடைக்காமல் போய்விட்டது. அதனால் தான் பட்டயப் படிப்பு முடித்த பின்னர் அன்று பட்டப்படிப்பு மாணவர்கள் பெற்ற செய்முறைப் பயிற்சி தற்போது பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் தொழிலில் வெற்றி பெற இயலவில்லை. அதனால் முன்பு இருந்ததைப் போல பட்டயப் படிப்பு முடித்த மாணவர்களை பட்டப்படிப்பில் சேர்த்தால் செய்முறைப் பயிற்சி நன்கு பெற்று தொழிலில் முன்னேறி வெற்றி காண முடியும். கற்பனை வளமும் பெற முடியும்.

வாஸ்து விஞ்ஞான நிலையங்கள் (செட்டி நாட்டு வீடுகள் மற்றம் மாளிகைகள்):

இப்பொழுது நான் பேசி வரும் வாஸ்து விஞ்ஞானப்படி கட்டப்பட்டுள்ள மாளிகைகள், வீடுகள் இன்றும் செட்டிநாட்டு சிற்றூர் பேரூர்களில் இருக்கின்றன. அந்த வீட்டில் வசித்த மனிதர்கள் எல்லாம் முடிசூடா மன்னர்களாக இருந்தார்கள். இப்பொழுது அவற்றை நவீன காலக் கட்டிடங்களாக மாற்றி வாஸ்துவின் பலன்களை அனுபவிக்க முடியாமல் போகின்றார்கள். இப்பொழுது செட்டிநாட்டுப் பழம்பெரும் வீடுகளை எல்லாம் தமிழ்நாடு அரசு வாங்கி யூனோஸ்கோ (UNESCO) என்ற நிறுவனத்தின் கட்டுபாட்டில் கொண்டு வந்து காத்திட ச் செய்ய வேண்டும். செட்டிநாட்டு வாஸ்து வீடுகள், மடங்கள் கோவிலுக்குச் சமமான புனித விஞ்ஞான இல்லங்கள் (Therapautic, scientific and sacred buildings). இந்த செட்டிநாட்டு வீடுகளின் மீது தமிழ் நாடு அரசின் கவனத்தைத் திருப்ப வேண்டும். இது தான் எனது பெரியதொரு கோரிக்கையாகும். தமிழர் எல்லோரின் ஆசையும் அவசியமுமாகும்.

கலாச்சாரத்தின் அவல நிலையும், அரசின் தலையாய கடமையும்:

Spiritual learning மேலை நாட்டில் நுழைந்து விட்டது. கைவினைஞர் எனப்படும் விஸ்வகர்மாக்கள் இந்தத் தொழிலையே குலதனமாக மற்றும் மூலதனமாகக் கொண்ட ஒரு

இனமாக இப்பொழுது இல்லாவிட்டாலும், ஒரு காலத்தில் இருந்தது உண்மையே. இன்னும் சொல்லப் போனால் விஸ்வகர்மா என்ற பெயர் ஒரு கெட்ட பெயரல்ல; ஜாதிப்பெயருமல்ல. கலைத் தொழில் கூட்டத்தின் ஆற்றலை விளக்கும் ஒரு வினையாலணைந்த பெயர்ச் சொல். இன்னும் சுருக்கிச் சொல்ல வேண்டுமானால் தமிழ்நாட்டுக்கு சொந்தமான இந்தக் கலாச்சாரம் முதல் சங்கத்தில் அறிமுகமாகி, அக்காலத்திருந்தே இன்று வரை இருந்து வருகிறது. அந்தக் கலாச்சாரம் தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி காலப் போக்கில் இந்திய கலாச்சாரத்திற்கும் முதுகெலும்பாகி விட்டது எனில் மிகையன்று. முதுகெலும்பாய் விளங்கியோர், இன்றும் விளங்குவோர் தான் விசுவகர்ம இனத்தினர். இவர்கள் பாரதத்தின் வடக்கிலும் தெற்கிலும் இருக்கிறார்கள். இவர்கள் ஒரு காலத்தில் விஞ்ஞானியர்களாகவும் தொழில் நுட்ப வல்லுனர்களாகவும் (Scientists and technologists) இருந்தனர். இன்று ஒதுக்கப்பட்டுக் கிடக்கும் இந்த விஸ்வகர்ம **கலாச்சாரத்தை காக்கும் பொறுப்பு டாக்டர் கலைஞர் அவர்களையே சார்கிறது.** இதற்குத் தான் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஐந்தமிழ் அறிஞர் என்ற சிறப்புப் பெயரை விஸ்வகர்ம சமூகத்தின் சார்பில் நான் அண்மையில் வழங்கினேன். பிறப்பாலும் அவரும் கலைஞர் இனத்தைச் சேர்ந்தவர் தான். இந்த விருதை அவர்கள் ஏற்றுக் கொண்டதை எல்லா விளம்பரங்களிலும் தவராது பிரகாசிக்கச் செய்ய வேண்டுகிறேன்.

இனி அடுத்து வரும் தமிழகப் பெரியோர்களும் இந்த அரிய அறிவியல் மரபைக் கட்டிக் காக்க வேண்டும். இந்தச் செய்திகளை அன்புடனும், ஆர்வமுடனும் செயல்படுத்தினால் ஆன்மிக கலாச்சாரத்தையும், விஞ்ஞான கலாச்சாரத்தையும் காத்து விட்டோம் என்பது பொருள். தமிழர் ஒவ்வொரு வரும் மற்றும் ஒவ்வொரு பாரதப் பெரியோர்களும் ஆஸ்திகர்களே என்பது இப்போது தெளிவாகியிருக்கும் என்று நம்புகிறேன். நாஸ்திகர் உண்மையில் எவருமில்லை. உயிர் பிறிந்த நிலையில் ஆஸ்திகர் நாஸ்திகர்களாகிறார்கள். சரி தானே? இதனை மெச்சிகோவில் உள்ள Amercian University செய்து வரத் தலைப்பட்டு விட்டது. அங்கு போய் வாஸ்து விஞ்ஞானம் கற்றுக் கொள்ள வேண்டிய அவல நிலை எதிர்காலத்தில் நமக்கு வர வேண்டாம்.

<u>விஸ்வகர்ம மக்கள் தொகை (Census)அவசியம் எடுக்க வேண்டும்:</u>

தொன்மை மிகு விஸ்வகர்ம சமூகத்தினர் 'மக்கள் தொகை' census எடுத்தல் அவசியம் என்று இத்தருணத்தில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இதே போல் கைத்தறி நெசவாளர்,

பூமியை நம்பி, மழையை நம்பி, விவசாயம் செய்து வரும் வேளாண் பெருமக்களின் தொகையினையும், நெசவாளர் ஜனத் தொகையினையும், கணக்கு எடுத்தல் வேண்டும். பண்டைத் தொழில் வாரிசுகளைக் காப்பது மிகத் தேவை. பகட்டான மேலை நாகரிகம் இப்போதெல்லாம் அங்கேயே [மேலை நாட்டிலேயே] குறைந்து வருகிறது. ஆயுர் வேதம் நிரம்பப் பரவி விட்டது. அலோபதி அருகி வருகிறது. இது எனது அனுபவம். எனவே அவர்கள் என்னைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். அவர்களை நமது கோவிலுக்குள் அழைத்துச் செல்ல அதிகாரிகள் தடுப்பதை சட்டத்தின் மூலம் நீக்க வேண்டும். இது அறியாமையின் உச்ச நிலை என்றால் உண்மையே. நான் அமெரிக்காவில் செய்த கோவில்கள் எல்லாம் இப்போது open to all ஆகியிருப்பது உண்மை. நம் நாட்டில் மட்டும் தடை இருப்பது பொருந்தாது இல்லையெனில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது பகட்டுரையாகப் போய் விடக் கூடும்.

ஐந்தமிழ் - மரபைக் காப்போம்:

தமிழ் மரபைச் சேர்ந்த காவியம், இசை, நடம் என்ற மூன்றையும் எப்படியோ காப்பாற்றி வருகிறோம். ஆனால், தமிழ் மரபு சார்ந்த சிற்பம், கட்டிடம் ஆகியவை அனைத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நம்மில் ஒரு சிலரும், அயல் நாட்டில் பலரும் விரும்புகிறார்களே, அது இங்கே கிடைக்கவில்லையே. விவரம் அறிந்த மேலைநாட்டினர் என்னிடம் சொல்லி விசனிக்கிறார்கள். எல்லாக் கட்டிடங்களும் மேலை நாட்டுப் பாணியில் ஓங்கி விளங்குவதால் தமிழைத் தமிழாகக் காப்பது போல் தமிழ் மரபில் நீடு நிலைத்திருக்கக் கூடிய சிற்பக்கலையையும் மற்றும் வீட்டுக் கட்டிடக் கலையையும் அரசு இத்தகைய நோக்குடனும், ஆர்வமுடனும் கவனிக்காவிடில் ஒரு நேரத்தில் நாம் எல்லோரும் அமெரிக்காவில் இருப்பது போன்ற உணர்வு தான் இருக்கும். Cancer போன்ற வியாதிகளுக்கு ஆளாவோம். பெண்கள் 3,4 கணவர்களை நாடுவர். இந்திய நாட்டில் இருக்கிறோம் என்ற உணர்வு அற்றே போகும். அதோடு தமிழ் உணர்வும் மறைந்து போகும். முத்தமிழோடு சிற்பக் கலை, கட்டிடக்கலை சேர்த்து ஐந்தமிழாகக் காப்பாற்ற [ஐந்தமிழ் வித்தகர்] அரசு தனது தலையாய கடமையாக செய்ய வேண்டும் என விண்ணப்பிக்கிறேன். தமிழ் நாடு அரசு தனிக் கவனம் மேற்கொள்ள வேண்டும். இன்றைய தமிழினமும் தமிழ் அரசும் தமிழ்க் கலைகளைக் காத்திடமுன் வரவேண்டும். இக் கலைகள் தமிழரிடமே இன்றும் உள. மடிந்து விடக் கூடாது.

தமிழரிடையே காணும் ஆங்கில மோகம்:

நம்மிடம் ஊடுருவிய ஆங்கில மோகத்தையும் மேலைப் பகட்டுப் பண்பாட்டையும் தவிர்த்து தமிழ் ஆர்வத்தை, தமிழ் பண்பாட்டை திரும்பி வரச் செய்யும் முற்சிகளைப் போல் தமிழ்க் கலைகள் ஓங்கிட, தக்க முயற்சிகளை எடுத்தாக வேண்டும். எனவே தமிழக கலாச்சாரத்தின் மீது நமது தமிழ் நாடு அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று எனது கோரிக்கையை தலையாய கோரிக்கை என்று மீண்டும் சொல்லிட விரும்புகிறேன்.

சங்க கால கைவினைஞர் நல வாரியம்:

நான் கைவினைஞர் நல வாரியத்தில் இருப்பது போல, குமரிக்கண்டத்தில் கைவினைஞர் நல வாரியமாய் விளங்கிய முதல்தமிழ்ச் சங்கம் விளங்கியது எனலாம். சிற்பி மயன் சங்கத் தமிழ் கலைகளை அரங்கேற்றிய காலத்திலிருந்து தொடர்ந்து வரும் இனத்தைச் சார்ந்தவன் நான். அது மட்டுமல்ல தஞ்சை பிருகதீஸ்வரர் [பெருவுடையார்] கோவிலை நிறுவிய குஞ்சரமல்லன் ராஜ ராஜப் பெருந்தச்சன் வம்சத்திலும் பிறந்தவன் நான். நானும் ஒரு காலத்தில் பெருந்தச்சன் என அழைக்கப்பட்டவன் தான். இருப்பினும், அண்மைக் காலத்தில் ஸ்தபதி என்ற பட்டம் வழக்கத்தில் வந்து விட்டதால் அதை நான் பின்பற்றுபவனானேன். குமரிக் கண்டத்தில் தோன்றிய இக்கலை பற்றியும் தெரிந்து இருப்பதோடு, ஆராய்ச்சிகளும் 50 வருடத்திற்கு மேல் செய்து வருகிறேன். இது ஒரு ஆத்ம சோதனை தான் (experiments with truth). இதன் பயனாய் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் உருவச்சிலையை தைரியமாக அசையாது நிறுவினேன் நான். இச்செய்தியை இப்போது பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.

சங்க காலத்தில் தோன்றிய ஐம்மறைகளையும், ஐந்தமிழையும் காப்பதில் தமிழ் நாடு அரசு முனைப்புக் காட்ட வேண்டும். இந்தத் தமிழ் மறை நம்மால், நம் காலத்திலேயே உறுதிப்பட வேண்டும். இதில், முக்கியமாக டாக்டர்.கலைஞர் அவர்களும், எதிர்வரும் எல்லா அரசும் ஆர்வத்துடன் கவனித்தாக வேண்டும்.

ஐந்திறம் என்ற ஐம்மறை நூல்:

என் கணக்குப்படி 15,500 ஆண்டுகளுக்கு முன்பு முதற்சங்கக் காலத்தில் குமரிக் கண்டத்தில் நிலந்தரு திருவில் பாண்டியன் காலத்தில், இக்கலை மரபு ஓங்கிப் பெருகியது. இதனைத் தமிழ் நாடு அரசு 1986ம் ஆண்டு வெளியிட்ட ஐந்திறம் என்ற நூலில் எனது அறிமுகவுரையில் இதன் வரலாறை விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இந்நூலை யாரும்

இதுவரை படிக்க ஆர்வம் காட்டவில்லை. தமிழறிஞர் பலரும் இதனை உதாசீனப் படுத்தி விட்டனர். இதனால் தமிழ் மரபிலே பிரிவுகள் ஏற்பட்டு விட்டன. இப்பிரிவு எல்லாம் பிரளயத்திற்கு பிறகு ஏற்பட்ட பிரிவுகள் தான். பிரளயத்திற்கு முன் தமிழ் தமிழாகத் தான் இருந்தது. தமிழினமும் இந்திய இனமும் ஓரினமாகத் தான் இருந்தன. இக்கருத்தை வேதவியாசனே பாகவதத்தில் பதிந்து விட்டுப் போயிருக்கிறான். இச் செய்தியினை டாக்டர்.கலைஞர் அவர்களிடம் அண்ணா அறிவாலயம் கட்டும் போது நேரிலே அவரிடம் பேசினேன். வியந்தது மட்டுமல்ல ஆவன செய்யத் தூண்டினேன்; வேண்டினேன். நல்லது செய்வார்கள் என்று இன்றும் நம்புகிறேன். அவர்களுக்கு வைத்த ஐந்தமிழ் வித்தகர் என்ற விருதுப் பெயர் பல்லாண்டு வாழ விஸ்வகர்மர்கள் சார்பில் மனமார வாழ்த்துகிறேன்.

தமிழ் என்ற சொல்லின் பிறப்பியல் மற்றும் தொடர்புடைய பிற குறிப்புகள்:

உணர்வே [ஜீவன்மா] [ஒரு கருத்துணர்வே] நம் அகத்தில் தோன்றி அதுவே அமிழ்ந்து, பிறகு அதுவே இமிழ்ந்து, பிறகு குமிழ்ந்து, அதன் பிறகு உமிழ்ந்து, இறுதியாக தமிழ்ந்து தமிழாக வெளிப்படுகிறது என்றான் மயன். கரு இப்படித் தான் கருத்து ஆகிறது. இஃது ஓர் அறிவியல் நுட்பம். தமிழ் மக்களாகிய, நுண்வினைக் கம்மியர் சொன்ன கோரிக்கையை செவிமடுத்துக் கேட்டு ஐந்தமிழை காக்கப் போகும் கலைஞர் பெயரோடு ஒட்டி நிற்கும் நிலை எய்திட வேண்டும் என மீண்டும் பணிவோடும், அன்போடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழைய அறிவியல் ஏடுகள் எப்படிக் கிடைத்தன! இதோ மாணிக்காவாசகரின் மணிவாசகம்:

"மன்னுமாமலை[1] மயேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருவியும்
கேவேடராகி கெளிரது படுத்து
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும் (Heritage)
மற்றவை தன்னை மயேந்திரத்து இருந்து
உற்ற வைம்முகங்களாற் பணித்து அருவியும்"- திருவாசகம் – கீர்த்தித் திரு.அகவல்

[1]அதாவது தற்போது நாம் பெற்றிருக்கும் இந்த நூல்கள் எல்லாம் ஆலமர் செல்வனாய் மயன் அமர்ந்து கொண்டு மயேந்திர மலையில் சொல்லப்பட்டது எனவும் பிரளயத்திற்கு பின்னர் இந்த நூல்களை எல்லாம் மீனவர்களால் கிடைக்கப் பெற்றதாகவும் கூறுவதை அறிய முடிகின்றனது. பாகவதத்தில் வேதங்களை தொகுத்துச் சொன்ன வேத வியாஸரும் மீனவர் குடும்பத்தில் பிறந்தவர் என்ற கருத்தையும் மாணிக்கவாசகர் சொன்ன செய்தியையும் ஒப்பிட்டு அறிஞர்கள் ஆய்வு செய்திடுச் தங்களால் கிடைக்கப் பெறும் செய்திகள் மிக இன்றியமையாததாக அமையும்.

பரம்பொருள் எங்கும் உண்டு பெருங்கலை யாண்டும் உண்டு
பரம்பொருள் உணர்வினாலே ஒளிவழிபாடு கண்டேன்
பரம்பொருள் அருளினாலே திருநட ராசன்கண்டேன்
பரம்பொருள் அருளினாலே பெருங்கலை படைத்தேன்காண்பீர் -
[வை:1166] - மயன்

இவ்வளவும் சொல்லிய பிறகு இந்த மரபினுடைய தோற்றம், நலிவு, ஆகியவை மீண்டும் உணரப்பட்டு சிறப்பு எய்துவது தொடர்பாக ஒரு முக்கியமான செய்தியை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது என்பதை உணர்ந்து, வைசம்பாயணம் என்ற நூலில் மயனே பாடியதாக, அந்த நூல் கூறும் அந்த தெய்வப் பாடலின் உண்மை புரியுமானால், அது நடைமுறையில் வர முடியுமானால், அந்த நற்காலமாகிய பொற்காலம் தோன்றும் நாள் மிக அருகிலேயே இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. அதற்கு நாயகனாக "கலைஞர்" விளங்குவார் என்பது காலம் காட்டும் காட்சியாகும்.

எனவே இந்த முக்கியமான வைசம்பாயனப் பாடலை இங்கே சமர்ப்பிக்கின்றேன். படித்து இன்புறுங்கள். நல்லதை எதிர் பாருங்கள்.

அற்புதம்	விளங்குமிந்நூல்	அருட்கலைத்	திறன்விளங்கும்
பொற்புதம்	காலம் எல்லாம்	பொன்னொளி	திகழ்ந்திருக்கும்
பற்பல	காலம் தோன்றாப்	பொற்புடன்	மறைந்திருந்து
பொற்புறும்	காலம் நேரும்	பொழுதினில்	விளங்கு மன்றே (௧௨௧௨)

விஸ்வகர்மர் என்போர் யார்? அவர் கண்ட ஐந்து வேதங்கள் யாவை?

விஸ்வர்கமர் எனப்படுவோர் தலைமுறை தலைமுறையாக ஒரே பணியை [நாகர, திராவிட, வேஸரப்] பாணியில் (Style) செய்யும் சமூகத்தினராக இருந்து வருகிறார்கள். ஒரு காலத்தில் குமரிக்கண்டத்தில் தோன்றிய இவர்கள் தமிழர்களாக இருந்தாலும், மற்றுமொரு தொல் மொழியாகிய சமஸ்கிருதத்தையும் படித்திருந்தார்கள். "நூலறி புலவோர்" என்று இளங்கோவடிகள் நுட்பமாகச் சொன்னதின் கருத்தை நினைவிற்கு கொண்டு உற்று நோக்குக. பிரளயத்திற்கு முன்னால் இவர்கள் முற்றிலும் தமிழைத் தான் தாய் மொழியாகக் கொண்டு தமிழை எழுதியும், பேசியும் வந்த விசுவகர்மர் அன்று போல் இன்றும் பச்சைத் தமிழர்களே. இளங்கோ சொல்வதை இப்போது நோக்குவது கலை மரபின் மறுமலர்ச்சிக்கு உதவும் என்பதால் கூறுகிறேன். "நுண்வினைக் கம்மியர் காணா மரபினர் மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம்".

விஸ்வகர்மர் எல்லோரும் சைவர்களே. இவர்களில் இன்னாள் வரை வைணவர் என்று எவருமில்லை. சாக்தம், வைணவம், சைவம், கௌமாரம், காணபம், சௌரம் ஆகிய அறுசமயக் கோவில்களையும், புத்தம் சமணம் என்ற மதக் கோவில்களையும் கட்டிக் கொடுத்த சமதர்ம நோக்குடையவர்கள். அவர்தம் கலை நூல்கள் அனைத்தும் ஒரு காலத்தில் தமிழ் நூல்களாகவே இருந்தன. பிரளயத்திற்குப் பிறகு தான் இரண்டு மொழிகளுக்கும் போட்டி ஏற்பட்டு குழப்பங்கள் மிகுந்தன என்பதை ஆராய்ச்சி அறிஞர்கள் அறிவர். சமஸ்கிருதத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழ்நாட்டில் எவருமே இல்லை. சம்ஸ்கிருதம் பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் தாய் மொழியாகவும் இனச் சார்புடைய மொழியாகவும் இன்னும் வரவில்லை என்பதை இத்தருணத்தில் நினைவிற் கொள்ளுதல் தகும் என்க.

அதே சமயத்தில், விஸ்கர்மர்கள் தமது கைவசம் வைத்திருந்த நூல்களும் [எல்லாம் கலை நூல்கள்] கலை மொழியாக இருந்ததினால் அவர்களிடமே இந்த இரண்டு கலை மொழிகளும் நூல்களும் ஒன்றித்தும் ஒதுங்கியும் நின்று விட்டன. [காண்க பிற்சேர்க்கை] எனவே தமிழில் இருப்பது சமஸ்கிருதத்திலும், சமஸ்கிருதத்தில் இருப்பது தமிழிலும் இருப்பதாயின. இந்த நிலையில் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லிக் காட்ட கடமையென உணர்கிறேன்.

விஸ்வகர்மர்கள் சொல்லி வந்த Technical manuscripts இரண்டு மொழிகளிலும் இருந்தன என்றாலும், பிரளயத்திற்கு முன் இந்த மொழிகளில் தமிழ் தான் நடைமுறையில் இருந்தது. தமிழ் செம்மொழியாகி, அதைப் பார்த்து செம்மொழி என்பதற்கு எதிரொலியாக சமஸ்கிருதம் என்ற பெயர் சம்ஸ்கிருதத்திற்கு வந்தது. உண்மையில் தமிழர் கையாண்ட சம்ஸ்கிருதத்தைத் தான் "கிரந்தம்" என்று சொல்லுவோம். தமிழ் எழுத்துக்களும் சமஸ்கிருத அக்ஷரங்களும் தமிழ் வழிப்பட்டனவே. American English, Indian English, Technical English என்று சொல்வது போல கலை சமஸ்கிருதம் தான் [கிரந்தம்] என்று எங்கள் கலை மரபிலே வந்தது என்று அதையும் தகவலுக்காக இந்த வெள்ளை அறிக்கையில் இணைத்து வைக்கிறேன். சம்ஸ்கிருதம் எவருக்கும் தாய்மொழி அல்ல, என்று சொல்லும் நிலையில் கிரந்தம் என்ற மொழி தனித்தே இன்றுவரை இயங்கி வருகிறது. எவர்க்கும் இதுவும் தாய்மொழி அல்ல. **மணிப்பிரவாளத் தமிழ்** என்பது போல சிற்பியர் கிரந்தத்தை **மணிப்பிரவாள சம்ஸ்கிருதம்** என்றும் சொன்னால் தவறல்ல. இது போல் கேரளம், கன்னடம், தெலுங்கு மொழிகளிலும் இம் மணிப்பிரவாள நடை ஏற்பட்டு விட்டது. பிற்காலத்தில் தனித்தனியாக ஓங்கி விட்டன; ஒதுங்கி விட்டன எனலாம். இது தான் உண்மை நிலை. இந்த நிலையில் எழுந்த கலை சம்ஸ்கிருதத்தை சில ஆசிரியர் Barbarous language என்றும் [காட்டு மிராண்டிகள் மொழி] சொல்வாராயினர். அதாவது தமிழ்வழி பெற்றிட்ட தமிழ் சமஸ்கிருதம் (because grammatically and metrically not so good) என்பது தான் சரி. இஃதொரு வினையால் அணைந்த பெயர் (Verabal noun) அதாவது தொழிற் பெயர். கிரந்தம் என்ற சொல்லுக்குப் பொருள் யாதெனில் கட்டு / ஓலை ஏடுகளின் கட்டு என்பது நாங்கள் சிற்பிகள் சொல்லும் பொருள்.

<u>வேதங்கள் நான்கல்ல – வேதங்கள் ஐந்து:</u>

சுருக்கமாக என்ன சொல்ல ஆசைப்படுகிறேன் என்றால், வேதங்கள் நான்கு என்று சொல்லுகையில் திருமந்திரம் ஐந்து என்று சொல்லுகிறது. திருமந்திரம் ஒரு தமிழ் நூல். தமிழ் மரபுச் செய்திகள் நிரம்ப உண்டு. அதை எழுதியவர் மூலன் என்பர். இந்த விஞ்ஞானப் பாடலை/ செய்திகளைத் தந்தவன் தான் நான் ஏற்கனவே சொல்லி வந்த மயன் ஆவன். அவன் முதலில் மகாபாரதத்தில், வேதவியாசன் மயனை அர்சுனனிடம் அறிமுகப்படுத்திய நேரத்தில், மயனை விசுவகர்மன் என்று அறிமுகப்படுத்துகிறான். இவன் வழி வந்தோர் அன்று முதல் இன்று வரை விஸ்வகர்மர் என்றே அழைக்கப் படுகிறார்கள். பரம்பொருள் எந்தக் கணக்கில் இவ்வுலகப் பொருள்களைச் சமைக்கின்றானோ. அந்த கணக்கை இன்று வரை நாங்கள் கையாளுகிறோம்.

இக்கணக்கு தாளக்கணக்காக – காலக் கணக்காக ஐந்து கலைகளிலும் ஒரே மாதிரியாகக் கையாளப்படுகிறது. எனவே தான் முத்தமிழ் என்றும் ஐந்தமிழ் என்றும் சிற்பிகளாகிற நாங்கள் இன்றும் சொல்லி வருகிறோம். சிற்பிகள் வணங்கும் சிவனுக்கு ஐந்து தலைகளும் பத்துக் கைகளும் கொடுத்திருக்கிறேன். [படம் காண்க]. அதையும் இங்கே இணைத்து வைக்கிறேன். உங்கள் ஆய்வுக்கு உதவும்என்பதால் இங்கே இணக்கிறேன்.

"अहं हि विश्वकर्मा वै दानवानां महाकविः ।"

"நான் தான் விஸ்வர்மா – தானவர்களின் மகாகவியும் நானே" என்பது பொருள். இவன் எழுதிய வேதமும் வேத சார நூல்கள் எல்லாம் தமிழில் எழுதப் பட்டதால் தானவர்கள் என்பதை தமிழர்கள் என்று கொள்வதே பொருந்தும் என்க.[ஆய்வர் மேல் ஆய்வு செய்க]

எனவே இவனால் வேதங்கள் ஐந்து என்ற செய்தி வெளிப்பட்டது. அந்த வேதங்கள் ஐந்து என்ற செய்தியை நான் [ஒரே இலக்கணம் என்பதால்] நிரூபித்து [இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம்] அவற்றை மேலை நாடுகளிலும் பரப்பினேன். நம் ஊரிலும் பரப்பினேன். வேறொரு நாகரிகத்தில் ஊரிப் போன நம்மவர் முதலிலே ஏற்றுக் கொள்ள வில்லை. விஸ்வகர்மர்கள் வேதங்கள் ஐந்து என்று சொல்லிய திருமூலரும் தமிழர் ஆவார். மயன் என்ற வேத விற்பன்னனுக்கு பன்னிரெண்டு சீடர்களில் ஒருவர் பெயர் மூலன் என்பதால் திருமந்திரத்துக்கு ஆசிரியர் திருமூலர் ஆனார். மற்றவர் பெயர்களைக் கீழே காண்க. பன்னிரண்டு சீடர்கள் பெயர் ஆவன: நாதன், ஆயன், மூலன், நூலன், கீதன், போதன், வேதன், சீலன், தூயன், மாயன், நேயன், வேலன் ஆகும். மயன் எழுதிய முதல் வேதம் பிரணவ வேதம் [அ] ஓம் மறை என்பது பொருள். பாகவதத்தில் வேத வியாசனே சொல்லியிருக்கிறான். [சான்றைக் கீழே காண்க]

வேதங்கள் ஐந்து

"பூதங்கள் ஐந்திற் பொறியிற் புலனைந்தில்
வேதங்கள் ஐந்தின் மிகுமா கமந்தன்னில்
ஓதுங் கலைகளாம் ஊழி யுடன்அண்டப்
போதங்கள் ஐந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே"

– திருமந்திரம் – 2684

"एक एव पुरा वेदः प्रणवः सर्ववाङ्मयः ।
देवो नारायणो नान्यः एकोऽग्निर्वर्ण एव च ॥"

"ஏக ஏவ புரா வேத: ப்ரணவ: ஸர்வவாங்மய: ।
தேவோ நாராயணோ நான்ய: ஏகோऽக்னிர்வர்ண ஏவ ச ॥"

"மன்னுமாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்
கேவேடராகி கெளிறது படுத்து
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தன்னில் மகேந்திரம் அதனில்
உற்ற ஐம்முகங்களாற் பணித்து அருளியும்"

திருவாசகம் கீர்த்தித் திரு அகவல்

"ऋग्यजुः सामाथर्वाख्यान् वेदान् पूर्वादिभिर्मुखैः ।
शास्त्रमिज्यां स्तुतिस्तोमं प्रायश्चित्तं व्यधात्क्रमात् ।
आयुर्वेदं धनुर्वेदं गान्धर्वं वेदमात्मनः ।
स्थापत्यं चासृजद् वेदं क्रमात्पूर्वादिभिर्मुखैः ॥
इतिहास पुराणानि पञ्चमं वेदमीश्वरः ।
सर्वेभ्य एव वक्त्रेभ्यः ससृजे सर्वदर्शनः ॥"

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

- வேத வியாசன்

இதற்கு ஏற்ப முழு முதற் கடவுளை விஸ்வகர்மன் என்று சொல்லி வந்தார்கள். ஆகமங்கள் கூட ஒத்துக் கொள்கின்றன. ஐந்து தலை விஸ்வகர்மனின் சிற்ப வடிவத்தை நான் இரண்டு இடங்களில் பார்த்து இருக்கிறேன். ஒன்று தஞ்சைப் பெருவுடையார் கோயில் வாயில் கோபுரத்தின் கிழக்கு பக்கத்தில் ஈசான்ய மூலையில் ஒரு சுதை வடிவமாக சிதைக்கப்படாமல் காப்பாற்றப் பட்டிருக்கிறது.



தஞ்சாவூர் முன்கோபுர வாயிலில் உள்ள
விஸ்வகர்ம சுதை வடிவம்

இரண்டாவது இதே போல பட்டிஸ்வரத்தில் கோவில் கோபுரத்தில் மேற்கு பக்கத்தில் சுதை வடிவத்தில் இன்றும் உளது.



பட்டிஸ்வரம் கோபுர வாயிலில் உள்ள
விஸ்வகர்ம சுதை வடிவம்

ஆனால் இந்த வடிவம் நிரம்ப காணப்படுவது கர்நாடக மாநிலத்தில் தான். ஆனால், தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் ஒருவர் [டாக்டர் தேவதாஸ்] தேர் சிற்பக்கலை நூலை எழுதியுள்ளார். வெளியிட்டுமுள்ளார். அவரும் விஸ்வர்மனை தேர் சிற்பத்தில் காட்டிப் பேசி, ஐந்து தலைகள் உள்ளவனாகவே சொல்லுகிறார். நானும் பார்த்திருக்கிறேன்.

எதற்காக இவ்வளவும் சொல்லுகிறேன் என்றால் ஆதி சிவனுக்கு ஐந்து தலைகள். அவை ஐங்கலைகளாகும்; ஐம்மறைகளாகும். அதில் ஒரு தலையைக் கொய்த்து விட்டார்கள். இதனைச் செய்த இடம் திருவையாறுக்கு அடுத்துள்ள சிவத்தலமான சிரக்கண்டியூர் என்பதாகும். ஐந்தாவது தலை எதற்காக என்று பொருளறியாமையால் நிகழ்ந்த தவறு. இந்த ஐங்கலைகளையும் வெளிக்காட்டியது போல இந்த கோபுர சிற்பங்கள் மற்றும் மரச் சிற்பங்கள் சான்றுகளாக இருக்கின்றன. நாங்கள் நான்முகனை வணங்குவதில்லை. சிற்பியர்களாகிய நாங்கள் ஐம்முகத்தைக் கொண்ட விஸ்வகர்மனைத் தான் வணங்குகிறோம். வேலை செய்யாத அமைதி உருக்கொண்ட விஸ்வர்கர்மனை விஸ்வப் பிரம்மம் (Potential energy) என்றும், வேலை செய்பவனைவிஸ்வகர்மன் (Kinetic energy) என்றும் சொல்லி வருகிறோம்.

எனவே, டாக்டர் கலைஞர் அவர்கள் விஸ்வகர்மர் என்பவர் தொழிலாளர் கூட்டமே என்று ஒரு முறை மேடை பேச்சில் சொல்லியது நூற்றுக்கு நூறு உண்மை என்று சொல்லி முடிக்கிறேன்.

இந்த ஐந்தாவது வேதம் தான் முதல் வேதம் என்றும் ஒரே வேதம் என்றும் பிரளயத்திற்கு பிறகு பாகவதத்தில் வேதவியாசன் சான்றாகக் காட்டி இருக்கிறான். ஆகவே, இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகியவையே தமிழ் வேதங்கள் ஆகும். இவை சமஸ்கிருதத்தில் ஸப்தவேதம், காந்தர்வ வேதம், நாட்டியவேதம், ஸ்தாபத்ய வேதம், பிரணவ வேதம் என்று இன்றும் சொல்லி வருகிறோம். விஸ்வகர்மர்களுக்கு இவை Technical நூலாக இருந்தமையால் அந்த நூல்களுக்கு உரை நூல்கள் வராததால் தான் ஒருவருக்கும் புரியாத ஒரு புதிராக நமது ஆன்மிகத் தமிழ் நூல்கள் அமைப்புகள் ஆக்கிவிட்டன. ஆனால் கட்டிடங்கள், சிற்பங்கள், வீடுகள் சாஸ்திர ரீதியாகக் கட்டப்பட்டு விட்டதால் அவையெல்லாம் Visual Commentaries ஆயின. அதை மீண்டும் வெளிக் கொணர்வது டாக்டர்.கலைஞர் அவர்களின் தலையாயக் கடமையாகும் என்று விண்ணப்பிக்கிறேன். இதனையும் இந்த வெள்ளை அறிக்கையில் சுட்டிக் காட்டுவது கடமையென உணர்கிறேன்.

<u>அயல்நாட்டில் தமிழக சிற்பக்கலை மரபு பரவி விட்டது:</u>

இதெல்லாம் இப்படியிருக்க நம் நாட்டுக்கு வந்து செல்லும் அமெரிக்கர்களில் ஒரு சிலர் நமது சாஸ்திரீய அதாவது விஞ்ஞான கலாச்சாரத்தை அறிய கடந்த 50 ஆண்டுகளாக வந்து போகின்றார்கள். அதன் பயனாய் One God One World என்ற திருமந்திரத் தத்துவத்தைப் படித்துத் தேர்ந்து **<u>சன்மார்க இறைவன் Temple</u>** [சம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் மூன்றும்

மும்மொழியில் இருப்பதைக் காண்க.] என்ற பெயரில் முற்றிலும் கல்லால் கட்டிட 1992ஆம் ஆண்டில் ஒரு கோயில் திருப்பணியை ஹவாய் தீவில் (USA) ஆரம்பித்து இன்று முடிவுறும் தருவாயில் உள்ளது. அக்கோயிலில் பரிவாரங்கள் இல்லை. அக் கோயிலை நடத்தும் அமெரிக்க சுவாமிகள் ஆன்மிக நூலாக திருமந்திரத்தையும், வாழ்வியல் நூலாக திருக்குறளையும் [இரண்டையும் மூல நூல்களாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!] சீடர்களுக்கெல்லாம் தமிழ்ப்பெயரையே சூடிக் கொண்டிருக்கிறார்கள். சைவ சமயத்தின் விஞ்ஞானச் சிறப்பை அறிந்த அமெரிக்க சுவாமிகள் [லோக குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் என்பது தலைவர் பெயர்.] ஹவாய் தீவில் ஆஸ்ரமம் ஒன்றை அமைத்துக் கொண்டு Hinduism Today [பழைய பெயர் New Saivite World) என்ற மாத இதழை நடத்திக் கொண்டு, நமது வைச சமயத்தையும் நமது தமிழ்ப் பெயர்களையும் பூண்டு அதற்கு இசைவான தமிழர் வாழ்க்கையையும் பண்பாட்டையும் ஒழுகி, அதனைக் காத்தும் பெருக்கியும் பரப்பியும் வருகிறார்கள்.

1978ஆம் ஆண்டில் என்னை ஹவாய் தீவிற்கு [அரசு அனுமதியுடன்] வரவழைத்தார்கள். [இது தான் USAக்கு நான் செய்த முதல் பயணம்] அங்கு One God One World என்ற தமிழர் கொள்கையை (conceptஐ] விளக்கி சொல்லச் செய்து, வாஸ்து மரபின் விஞ்ஞானத் தன்மைகளை அவர்கள் புரிந்து கொண்டு, ஒவ்வொரு சுவாமிகளும் நமது தமிழ் சைவ சமய மரபின் அருமைப்பாட்டை உணர்ந்து, சைவ நெறி மீது அளவில்லா பற்றும் கொண்டு உள்ளார்கள். இன்று வரை எனக்கும் இந்தக் கோவிலுக்கும் நீண்ட நாள் தொடர்பு உண்டு. இன்னும் ஒரு சில மாதங்களில் பணி முற்றுப் பெற்று நமது சைவ சமயத்தை உயர்த்திக் காட்டுபவர்கள் ஆகிட இருக்கிறார்கள். சைவ சமயம் ஒரு விஞ்ஞான சமயமாகக் கண்டு கொண்டவர்கள் அவர்கள் தான் என்று சொன்னால் மிகையாகாது. சைவ சமயம் உலகம் முழுவதும் பரந்து, விரிந்து ஆழ வேரூன்றும் என்று இப்போதே சொல்லி வைக்கிறேன்.

இதற்குப் பிறகு 1996 ஆம் ஆண்டு ஹவாய் சுவாமிகளான சிவாய சுப்ரமுனிய சுவாமிகளின் அழைப்பின் பேரில் சென்ற போது அமெரிக்காவில் கிழக்குக் கரையோரத்தில் சிக்காகோ, வாஷிங்டன் D.C, நியூஜெர்சி, செயின்ட்லூயிஸ், ஓமஹா, மியாமி போன்ற இடங்களில் வசிக்கும் இந்தியப் பெருங்குடி மக்களுக்கு சைவமும், வைஷ்ணமும் ஒன்று என்று ஆதாரத்துடன் விளக்கிப் பேசி அங்கு பல இடங்களில் சிவவிஷ்ணு கோயில்களை [1988] கட்டிக் கொடுத்திருக்கின்றேன். பிற தமிழக ஸ்தபதிகளும் மேலைக் கடற்கரை நகரங்களில் தமிழ் மரபுசார் கோவில்களைக் கட்டியுள்ளார்கள்.

சிக்காகோ நகரத்தில் அமெரிக்கர்களும் அறியச் செய்யும் வகையில் விவேகானந்தரின் நினைவாலயம் ஒன்றைக் கட்டிக் கொடுத்திருக்கின்றேன். இதன் மூலம் நாம் அடைந்த பயன் என்னவென்றால், தென்னக மரபின் இறைக் கொள்கை தழுவிய, அறிவியல் நெறியை நான் பரப்பியது மட்டுமல்லாமல், தமிழ் நாட்டில் காண முடியாத தரம் உயர்ந்த கோயில்களை அமெரிக்காவில் கட்டி கொடுத்திருக்கின்றேன். நமது தமிழர் நாகரிகத்தைப் பற்றி

பெருமையாக பேசிக் கொள்கிறோம். அமெரிக்க வாழ் இந்தியர் சிறப்பாகவே செய்து வருகிறார்கள். சைவ, வைணவ ஒருமைப்பாட்டை அங்கு நிலைநாட்டி எல்லோரும் மதவேறுபாடு, இனவேறு பாடின்றி ஒற்றுமையோடு வாழ வைத்திருக்கிறேன். இந்தக் கோயிலுக்குள் எந்த மதத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் உள்ளே போகலாம் வழிபாடு செய்யலாம் என்பது புதிய விதியாக மாறிவிட்டது. நமது இந்தியர்கள் இத்தகைய நிலைக்கு வராக் காரணம் அதற்கான அறிவியல் படிப்பும், அடிப்படை வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும், சமத்துவ உணர்வும் இன்னும் ஏற்படவில்லை எனலாம். [அடுத்து Temple without God என்ற கருத்தில் ஒரு கோயிலைக் கட்டப் போகிறேன். இதனை கோயிற் சமயம் என்பர் சிற்பிகள். கோயிற் கட்டிடமே வழிபடு பொருள் என்பது விஞ்ஞானம்.] இது முற்றிலும் மெய்யே. நான் செய்த பணிகளில் பல சிற்பிகள் ஈடுபடுத்தப்பட்டு நல்ல செல்வநிலை அடைந்திருக்கிறார்கள். ஆனால் எதிர்காலத்தில் இனி இத்தகைய வேலை அமெரிக்காவில் கிடைக்கும் என்பது அரிதாகி விட்டது. இதற்கு மாற்றாக,

அமெரிக்கர்கள் இன்று வாஸ்து விஞ்ஞானப் பாடமும் , பயிற்சியும் பெற என் வீடு தேடி வந்து கற்றுப் போகிறார்கள். அவர்கள் நாட்டிலே இந்தத் தொழில் மரபை பரப்புவதற்காக அமெரிக்காவில் நியூமெக்ஸிகோவில் ஒரு பல்கலைக் கழகத்தை சென்ற ஆண்டே [2006ல்] ஆரம்பித்து நடந்து வருகிறது என்று பெருமையோடு சொல்லுகிறேன். அதன் பெயர் "American University of Mayonic Science and Technology" என்று வைத்திருக்கிறேன். இடம் New Mexico, USA.

அந்தப் பல்கலைக் கழகத்தில் ஐம்மறைகளான இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகியவற்றை கற்பிக்க தேவையான முயற்சிகளை செய்து வெற்றிகரமாக நடத்தி கொண்டிருகிறார்கள். இந்த நேரத்தில் UNESCO என்ற நிறுவனம், மூலம் உதவி பெற்று அந்த நிறுவனத்தோடு அப்பல்கலைக் கழகத்தை ஒட்டி அமைக்க Dr.Jessie Mercay டாக்டர்.ஜெஸ்சி மெர்ஸ்சி என்ற அமெரிக்கப் பெண்மணி முயற்சி செய்து Chancellorஆக , மிகச் சிறந்த முறையில் இப்புதிய பணியைப் பெருமையோடும், உற்சாகத்தோடும் செய்து வருகிறார்கள். மனைகளையும் வாஸ்துப்படி கட்டி வருகிறார்கள். தமிழகக் கோவில்களுக்குள் அமெரிக்கர் நுழைய அனுமதி தேவை/கிடைக்குமா?

அமெரிக்க மாயனுடைய விஞ்ஞானமும், தமிழக மயனின் விஞ்ஞானமும் ஒன்றே என்று நேரில் சென்று கண்டறிந்து நிருபித்துக் காட்டியவன் நான் தான் என்பதைப் பெருமையுடனும் அடக்கத்துடனும் சொல்லி "Sthapati's Visit to Maayan Land" என்ற ஒரு சிறிய ஏட்டை எழுதியிருக்கிறேன். மேலை நாட்டவர்கள் இந்த இரண்டு மரபுகளும் ஒன்று என்று அறிந்த வகையில் இந்தத் தத்துவத்தை அறிந்ததோடு, 25பேர் கொண்ட ஒரு குழு எதிர்வரும் 2008 ஜனவரி மாதம் அந்த மயப் பல்கலைக்கழகத்திலிருந்து இந்தியா வரவிருக்கிறார்கள். பஞ்சபூத

ஸ்தலங்களைப் பார்வையிடவே வருகிறார்கள். கோவிலுக்குள் நுழைய அனுமதி கிடைக்குமா? இத்தடையை அறவே நம் அரசு நீக்கிடல் வேண்டும்.

இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகிய இந்த ஐந்து கலைகள் [ஐம்மறைகள்] சிறப்பாக உலக முழுவதும் பரவக் கூடும் என்பதை பெருமையோடு சொல்ல ஆசைப்படுகிறேன். இதை நான் ஒருவனாகவே செய்து வருகிறேன். துணைவர்கள் எவருமில்லை. தற்போது அமெரிக்கர்கள் தான் என் உற்றார் உறவினராக இருக்கிறார்கள். எனது இறுதிக் காலம் வரை இங்கேயே இருக்கப் போகிறார்கள்!

மெக்ஸிக்கோ, எகிப்து நாடுகளுக்கு சிற்பியர் ஆய்வுப் பயணம்:

எதிர்வரும் நாட்களில் ஒரு குழுவாக சிற்பிகளும், தொல்பொருள் ஆய்வர்களும் ஓர் ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டு Mexico சென்றுவர டாக்டர்.கலைஞர் அவர்கள் அனுமதியும், அரசு ஆதரவும் பெற்றுக் கொடுத்து விட்டால் கலைஞர் அவர்களுக்கு வணக்கம் செலுத்தி ஆசியும் பெற்று சென்று வருவோம். இந்த அரிய பயணத்திட்டத்தை நான் சொல்லி வைக்கிறேன். இதைப்போல் எகிப்து, அங்கோர்வாட், அஜந்தா, எல்லோரா, மொஹஞ்சதாரோ [மயன் தரையோ?] சென்று வரத் திட்டங்கள் பல தீட்டி நடைமுறைப் படுத்தலாம். அமெரிக்காவிலும் கோயில்கள் கட்ட இனி இடமே இல்லை. அத்தனை கோயில்கள் அங்கே வந்து விட்டன. என்றாலும் இனி சிற்பியர்களுக்கு அங்கும் வேலைவாய்ப்புகள் மிகக் குறைவே. ஆகவே சிற்பியர்களாகிய எங்களுக்கு ஆதரவு காட்டக் கூடிய இடம் தாயகம் தான். சிற்பியர் இனத்தின் சார்பில் இதனை நான் இங்கே சொல்ல விழைகிறேன். உதவிட வேண்டுகிறேன். சமதர்ம உணர்வு சிற்பியர்களுக்கும் தேவையே.

எனவே, கைவினைஞர்கள் நலம் பெறவும், ஐந்தமிழ் ஓங்கிடவும் உலகெலாம் பரவிடவும் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:-

1. 60 வயதைக் கடந்த வறிய சிற்பியருக்கு ஓய்வூதியம் வழங்குதல் – அதற்கு நிதி ஆதாரமாக ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமான வரி செலுத்துவோரிடம் 1% விழுக்காடு தொகை பிடித்தம் செய்தல்.

2. மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் சிறந்த செய்முறைப் பயிற்சி பெற முன்பு இருந்தது போல் பட்டயப் (Diploma) படிப்பு முடித்த பிறகு பட்டப் (Degree) படிப்பில் படிக்க அனுமதித்து, அதனை நடைமுறைக்குக் கொண்டு வரலாம்.

3. ஸ்தபதியர் மற்றும் சிற்பியரிடம் தலா 12% தொழிலாளர் சேம நல நிதி பிடித்தம் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

4. பொதுப்பணித் துறையைப் போல (PWD), கோவில் கட்டுமானத்துறை (TWD)யைத் தனித்துறையாக தமிழ் நாடு அரசு துவக்கிட வேண்டும்.

5. விஸ்வகர்மா மற்றும் சிற்பத்தொழில்புரிபவர்களை தனியாக கணக்கெடுத்து அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) பட்டியலில் சேர்ப்பிக்க வேண்டும். உரிய உரிமைகளையும் ஆய்ந்து உதவிட வேண்டும்.

6. மெக்ஸிகோ, எகிப்து ஆகிய நாடுகளுக்கு சிற்பிகளும், தொல்பொருள் ஆய்வலர்களும் சென்று பழந்தமிழ் சிற்பக் கலையின் ஒற்றுமையை கண்டறிதல்.

7. தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் பெயருக்கு முன்னால் எல்லா விளம்பரங்களிலும் ஐந்தமிழ் அறிஞர் என்ற பெயரையே வைத்து ஐந்தமிழுக்கு சிரஞ்சீவித்துவம் அளிக்க வேண்டும்.

8. சிற்பக்கலை கட்டிடக்கலை சார்ந்த தமிழ், கிரந்தம் சார்ந்த நூல்களை உலகத்து நூல் நிலையங்களிலும், நம் நூல் நிலையங்களிலும் தேடிக் கொணர்ந்து ஒரு பொது Technical library அல்லது Vedic library என்ற ஒரு தனி நிலையம் கட்டி அதனை உலகப் பொது மக்களுக்கு உடமையாக்க வேண்டும். Lending library ஆக இருக்கக் கூடாது. மீண்டும் பண்டை நூல்கள் கொள்ளை போய்விடும்.

9. வாஸ்து புருஷன் (VAASTU PURUSHA) என்ற ஒரு மாத இதழைத் துவக்கினேன். அதனை மீண்டும் உயிப்பித்திட அரசு நிதி உதவி செய்திட வேண்டும். இந்த இதழ் எல்லோருக்கும் (Architects, Civil enginner, Sthapati) இனாமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

10. இனம், மொழி, நாடு வித்யாசமின்றி ஆர்வத்தோடு கோயில்களைப் பார்க்க வரும் அயல் நாட்டினரை தடை செய்வதை நீக்கி எல்லோரையும் அனுமதிக்க வேண்டுவது நமது தமிழ் மற்றும் பாரதீய கலாச்சாரம் பரவிட ஏதுவாகும். எனவே அனைவரையும் கோயிலுக்குள் [கருவறைக்குள் அல்ல] பார்வையிட அனுமதிக்க ஆணை பிறப்பிக்க வேண்டும்.

11. வாஸ்து சாஸ்திரங்கள் எம்மொழியில் இருந்தாலும் அத்தகைய ஏடுகளையும், பதிப்பித்த நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும், எதிர்மறை நூல்களையும் திரட்டி ஒரு பொது இயக்கமே தோன்றிடச் செய்ய வேண்டும்.

12. வருவாய் தரும் கலைச் சின்னங்களைப் படைத்த – அந்தந்தத் தலைவனுக்கு Royalty தொகையினை அவருக்கும் அவர்தம் வாரிசுகளுக்கும் வழங்கிட ஆணை பிறப்பிக்க வேண்டும்.

அற்புதம் விளங்குமிந்நூல் அருட்கலைத் திறன்விளங்கும்
பொற்புதம் காலம் எல்லாம் பொன்னொளி திகழ்ந்திருக்கும்
பற்பல காலம் தோன்றாப் பொற்புடன் மறைந்திருந்து
பொற்புறும் காலம் நேரும் பொழுதினில் விளங்கு மன்றே (1212)


ஆலமர் செல்வன்
மயன்


விஸ்வகர்மன்
ஐந்து தலைச் சிவபெருமான்

வை.கணபதி ஸ்தபதி.
தமிழ்நாடு அரசு நிறுவிய கைவினைஞர் நலவாரிய உறுப்பினர்.

ஐந்திறம்

காலப் பார்வையும், தமிழ்ப்பார்வையும்

(அறிஞர் வ.சுப.மாணிக்கம்)

"செந்தமிழ்ச் செல்வி"

என்ற தமிழ் இலக்கிய மாத இதழிலிருந்து பெறப்பட்டது

அக்டோபர் இதழ் பக்கம் 57-62,
நவம்பர் இதழ் பக்கம் 107-111,
திசம்பர் இதழ் பக்கம் 161-163
ஆண்டு: 1986

தமிழ்நிலைபெற்ற தன்னேரில்லா மதுரை மாநகரின் கண் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவில் வெளியிடப்பெற்ற 'ஐந்திறம்' என்ற பெறலரும் பனுவலை நான் வரவேற்கின்றேன். முன்னரே 'சிற்பச் செந்நூல்' எனப் பெயரிய கலைப்பனுவலை உரிமையோடு பதிப்பித்த தொழில் நுட்பக் கல்வியியக்ககம் ஐந்திற நூலையும் தொடர்ந்து வனப்புறப் பதிப்பித்திருப்பதைப் பாராட்டுகின்றேன்.

நம் நினைவுச் சுரங்கத்துள் ஐந்திற மணிகளைக் காத்துப் போற்றி வைத்து மாற்றுப்படாது அறிவுக் கருவுயிர்த்த புலவர் வீரபத்திரனார் நம் தனி மதிப்புக்கும் வழிவழி நன்றிக்கும் உரியவர். இந் நன்மகனார் இன்றும் தம் நினைவுச் சுரங்கத்தில் தேக்கித் தொகுத்து வைத்திருக்கும் பல்விலக்கச் செய்யுட்களையும், தொழில்நுட்பக் கல்வியியக்ககம் தொடர்ந்தும் விரைந்தும் பதிப்புருவாக்க வேண்டுமென்பது என் விழைவு. ஐந்திறத்தின் தெளிவு இவ்வெளியீடுகளைச் சார்ந்தது.

''பல்துறையில் ஆழ்ந்த புலமையும் ஆய்வனுபவமும் பெற்றுள்ள மூதறிஞர்கள் படித்துப் பார்த்து அவற்றின் நுட்பங்களை ஆய்ந்து மக்களுக்கு அவற்றின் பயனையும் பெருமையையும் வெளியிட வேண்டுமென்று கருதி, இப்போது அந்நூலின் மூலப் பாடல்களை மட்டும் அரசு வெளியிடுகிறது. தொடர்ந்து பிற கலை நூல்களின் மூலப் பாடல்கள் வெளியிடப்படும்'' என்று கல்வியமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள் எழுதியிருக்கும் அணிந்துரை பொருள் பொதிந்த செயலுரையாகும். ஐந்திறம் என்ற இவ்வெளியீடும் புலவர் வீரபத்திரனார் மனநினைவில் ஒத்தன ஒத்தனவாக ஒப்பிக்கும் எதிர்கால வெளியீடுகளும் வீறுமாறுபட்ட ஆய்வுப் பூசல்களுக்கு உரியனவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இன்திறனும் எதிர் திறனும் மிகுவது நூலுக்கு ஒளிதருமேயன்றி மடனாகாது. ஆதலின் ஐந்திறம் போன்ற

கலைப் பனுவல்கள் வருக, பதிப்புடல்கள் பெறுக, நடமாடுக. அதன்பின் மெய்ப்பொருள் காண்பார் திறன்செய்க என்பதுவே என் அறிவுரை. ''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா'' என்ற திருவாக்கின்படி நூல்கள் பிறப்பதற்கு முன்பே கருத்துத் தடை செய்யாது அறிவுக்களரியில் பயிலவிடுவோமாக.

நல்லுள்ளத்தோடு நிறைந்த நம்பிக்கையோடு ஐந்திறம் பதிப்புமெய் பெற்று இன்று நம் கைத்தலத்து இலங்குகின்றது. நம் ஆய்வுக்கு ஒரு புதுவுடைமை கிடைக்கப்பெற்றோம். ''தமிழுக்குத் துறைதொறும் துறைதொறும் அழகு காப்பாய். இதுதான் நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம் எழுக நன்றே'' என்று தமிழ் முன்னேற்றம் வேண்டினார் பாரதிதாசன். அதற்கு 'ஐந்திறம்' ஓர் எடுத்துக்காட்டு.

ஐயங்கள்:

இந்த ஐந்திற நூலைக் கற்பார்க்கு வலுத்த சிலபல ஐயங்கள் தோன்றாமல் இரா. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பதொப்ப, இந்நூல் தக்க சில ஐயங்களொடு தோன்றிய நூலேயாகும். ஐந்திறம் முதலான மயன்சுவடிகள் பல தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்து இருந்தவற்றைத் தாம் நான்காண்டுகள் இருந்து மனனம் செய்து கொண்டதாகப் புலவர் வீரபத்திரனார் கூறுகின்றார். இருபத்தைந் தாண்டுகட்கு முன் அஃதாவது மிக அண்மைக்காலத்தே இப்பழஞ்சுவடிகள் உயிராவணமாகத் தஞ்சையில் இருந்தன என்றால், அவற்றின் இன்றைய நிலை என்ன? அவை எங்கே? வரலாற்று முறையில் இதனை உறுதிப்படுத்த இக்காலத்து நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். எதிர் காலத்தார்க்கு நாம் தக்க விடையளித்தாக வேண்டும்.

ஐந்திற நூலின் காலம்:

தொல்காப்பியப்பாயிரம் கூறும் 'ஐந்திரம்' என்பது இப்போது பதிப்பாகியிருக்கும் ஐந்திறம் என்ற நூலா? இந்நூல் தொல்காப்பியத்திலும் தொன்மை சான்றதா? இல்லை, இல்லை என்றே ஒருவந்தம் முடிபு சொல்லிவிடலாம் என்றாலும், தொன்மைகாட்டும் இந்நூலின் மொழிக் குறிப்புக்கள் நம்மை மயக்குகின்றன.

1. சகரம் மொழிக்கு முதலில் வாராது என்பது தொல்காப்பியம். சங்கவிலக்கியங் களிற்கூட சமர், சந்து, சவட்டு, சமழ்ப்பு முதலான சில சகரக் கிளவிகள் புகுந்துள. 892 நூற்பாக்களும் ஏறக்குறைய 26000 அடிகளும் கொண்ட இந்நூற்கண்,

   ''ஆழ்மனை பாழ்மனை வாழ்மனை ஏழ்நிலம்
   தாழ்வுறும் மலைச்சரி வுறும்நிலை தோற்றம்'' [728]

எனச் சரிவு என்னும் ஒரே ஒரு சகர மொழி வரக்காண்கின்றோம். அதுவும் தனி முதலாக வரவில்லை என்பது நினையத்தகும்.

2. தொல்காப்பியத்துக்பின் 'செய்யாத' என்ற வாய்பாட்டில் எதிர்மறை பெயரெச்சங்கள் வந்துள. ''மணந்தார் அகலாத காலை'' [1226] 'உளவரை தூக்காத ஒப்புரவு'' [480] எனத் திருக்குறளிலும்,

''களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது'' [ஊர்சூழ்]

எனச் சிலப்பதிகாரத்தும் பின்னைய நூல்களிலும் இவ்வழக்குப் பெரிதாயிற்று. ஐந்திறத்திலோ செய்யாத என்ற வழக்கு ஒன்றுகூட இல்லை என்பது வியப்பைத் தரும். இமையா நோக்கம், தோன்றாப் பொருள், பொன்றாக் காலம், புனையா, ஓவியம், உலையா முயற்சி, குன்றாவுணர்வு, மாறாச் செந்நெறி, மூவாக்கலை, மாற்றிலாக் கணக்கியல் என்றவாறு 'செய்யா' என்னும் வாய்பாடாகவே வரக் காண்கின்றோம்.

3. விளக்குபு, கிளக்குபு, நோக்குபு, நாடுபு, ஓங்குபு, உணர்த்துபு, ஆற்றுபு, காட்டுபு என்ற செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்ச வடிவங்களும்; நிறீஇ, எனா அ முதலிய அளபெடை வடிவங்களும் உள்.

4. ஆநின்று கின்று, கிறு என்ற நிகழ்கால இடை நிலைகள் காணப்படவில்லை. கின்று என்பது சங்ககாலத்துக்குப் பின்பெருவழக்காகும். ஐந்திற நூலில் இவ்வடிவங்கள் இல. எனினும் மயன் எழுதியனவெனக் காட்டப்படும் சில தமிழ்ப் பாடல்களில் ''சிரத்தினாற் போற்றுகின்றேன் சிறியனேன் மயனே யன்றோ'' எனக் கின்றாட்சி வருகின்றது.

5. தொல்காப்பியத்துக்குப்பின் கள்ளீறு அஃறிணைப் பன்மைக்குப் பெரு வழக்காயிற்று. பன்மைப்பெயர்த்தொகைகள் பெருகியிருக்கும் இவ்வளவு பெரிய ஐந்திற நூலின் கள்ளீறுவரக்காணோம்; எனினும் மயன்யாத்தவேறு சில செய்யுட்களில், 'நற்றமிழ் இலக்கியங்கள்,' அருந்தமிழ் நூல்கள்' என்று கள் வரவைக் காணலாம்.

6. பரதம் இசை மருத்துவம் சோதிடம் பல்குறிச்சாத்திரம் பற்றிய தமிழ்ச் செய்யுட்களில் எல்லாம் வடமொழிச் சொற்களும் வடமொழி யெழுத்துக்களும் நிரம்பவுள. ஓவியம், சிற்பம், சித்திரம், நீரியல், விண்ணியல், மனையியல்,

கணக்கியல், வளியியல் என்றாங்கு பல்துறையிலக்கணம் பாடும் ஐந்திறப்பனுவலின் கண் வடவெழுத்து என்பது இல்லெழுத்தாகும். வட சொற்கூட இல்லை என்று சொல்லுமளவிற்கு மூன்று நான்கே தலைகாட்டுகின்றன. சிலம், புனிதமாநெறி, விற்பனத்திறம் என்பன நுனித்துப்பார்ப்பின் தமிழாகவும் கருத இடனுண்டு.

இவையும் இவைபோன்ற சிலவும் ஐந்திற நூலின் தொன்மை காட்டுவன என்று கொள்ளலாம். எனினும் பின்மை சுட்டுக் குறிப்புக்களும் பலவுளவே,

அ] 'எழுத்தே சொல்லே பொருள்சுவட் டிணியென
வழுத்தும் ஐந்தியல் முறைநெறி வழக்கே [9]
எழுத்தும் சொல்லும் பொருளும் விளக்கி
வழுவிலாக் சுவட்டிணி வளமுற வகுத்துச்
செழுமலர் ஐந்திதழ் செம்மல ரென்ன
முழுத்தமிழ் ஐந்தியல் நூல்நெறி யன்றோ [36]

என ஐந்தியல் கூறுவதாக ஐந்திறநூல் சுட்டும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கண அதிகாரத்தோற்றம் கி.பி.11 ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழிய காலமாகும் என்பது இலக்கணிகள் கருத்து.

ஆ] நன்னூலின் சாயல் எழுத்தியல் குறித்த பலவிடங்களிற் காணப்படும்

'எழுத்தே முதல்சார் பென்றிரு வகைத்தே [17]
எண்ணெழுத் தின்பெயர் உருவம் முறைபிறப்
பெண்ணியல் நுட்பம் எழுத்தியல் வகையே [27]
உயிர்நிறை முயற்சி யுள்வளித் திறனே
செயிரற எழுமணுத் திரளொலி யாற்றல்
உரமும் கண்டமும் உச்சியும் மூக்கும்
வரவே இதழ்நாப் பல்வகைத் தொழிலாய்
வேறுவே றெழுத்தொலி யாய்வரல் நெறியே [62]

நன்னூலுக்குப் பிந்தியது ஐந்திறம் என்று சொல்வதற்து இம்மேற்கொள்கள் ஓரளவு துணை செய்யும்.

'உழைப்புறும் முயல்வே ஊழினை நீக்கும் [201]
ஊழை வென்று உள்ளொளி காண்பரே [255]
உலைவில் ஊக்கமும் உணர்வும் ஓங்கி
ஊழை வெல்லும் உறுவலித் திறமுறும் [539]
உழைப்புறும் உண்மை ஊழினை வெல்லும்
முயற்சி பெருந்திறல் நல்குவ தியலாய் [883]

எனவரும் ஐந்திறப் பகுதிகள் 'ஊழயும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்' என்ற குறளை அடியொற்றியவாகும்.

தொல்காப்பியத்தை நினைவூட்டும் தொடர்களும் கருத்துக்களும் ஐந்திறத்தில் அரிதாக வருகின்றன. ஓரெழுத்தொருமொழி [351] கிளவியாக்கம் [355] புலனெவழக்கம் [369] கண்ணிமை கைந்தொடி [14] என்பன சான்றுகள்.

'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே [தொல் 551]

என்று தொல்காப்பியம் கூறிய திணை வரிசைப்படியே முல்லை மாநிலம் [783], தண்மலர் குறிஞ்சி [784], அணியியல் நிகழும் மருதம் [785], கடற்சார் நெய்தல் மாநிலம் [786] என நானிலங்களை ஐந்திறத்தார் கூறியுள்ளார். பாலை பற்றி வரையறுக்கும் நூற்பாவும் நம்மைக் கவர்கின்றது.

'முல்லையும் குறிஞ்சியும் முறைமை மாறி
ஒல்லையில் இருநிலம் திருநிலை ஆழ்ந்தும்
தொல்லை வேறுவே றிருநிலை மாறி
வல்லை கடுமை கோடை வெயில்நிலை
புல்செடி கொடிநிலை மாற்றமும் வீழ்ச்சியும்
நன்மரம் அற்றுறும் நீர்நிலை யற்றுறும்
நலத்தியல் நீரியல் நெறிமுறை சாரா
நிலமுறும் பாலை நெறிமுறை நிலமே [787]

இந்நூற்பாவைப் படிக்கும்போது சிலப்பதிகாரக் காடு, காண் காதையின் நடத்தைக் காண்கின்றோம்.

'வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகித் தன்மையிற் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்'

என்ற இளங்கோவின் அடிகளை ஐந்திறத்தார் போற்றிக் கொண்டார் என்றும் மேலும் சிறிது விரிவு செய்தார் என்றும் கருதலாமன்றோ?

ஐந்திறம் பல்துறை அறிவியற் பனுவலாதலின் இலக்கியத் தழுவல்கட்கும் உவமை முதலான இலக்கிய வனப்புகட்கும் அத்துணை இடனில்லை. இலக்கணத் தொடர்பான தழுவல்களையே நாம் காண முடியும்.

இ] ஐந்திறத்தில் ஓரடி முதல் அறுபது அடிவரை நூற்பாக்கள் எல்லாம் நாற்சீரடி யுடையவை. வகையுளிச்சீர் என்பதில்லை. மாச்சீர் விளச்சீர்கள் நிறைந்துள. காய்ச்சீர் காண்பதரிது. எனினும் குற்றியலுகரத்தைப் பொறுத்தவரை பரவலாக ஓர் யாப்புக் குற்றம் காணமுடிகின்றது.

'இயல்பி னோர்ந்து எண்ணுறத் தெரிந்தே' [636]
'உணர்வி லாய்ந்து ஒளியாற் கண்டே' [658]
'உள்குற் றுணர்ந்து ஒருபய னோக்கி' [700]

இவற்றை ஓர்ந்தெண்ணுற, ஆய்ந்தொளியால், உணர்ந்தொரு பயன் என முறைப்படி புணர்ப்போமானால் ஓரசை குறைவதையும், அடிநாற்சீர் இன்மையையும் பார்க்கின்றோம். இஃது அடியிடைக்குறை.

'விண்ணொலி ஒலிஓம் நிலைமறை யறிந்து
ஐந்தியல் மெய்க்கலை மெய்த்திறம் விளங்க' [109]
'அகவெளித் திறத்தாற் புறவெளி ஓர்ந்து
அகத்துணர் மெய்த்திறன் கலைநிலை கூறுமே' [204]
'உற்றுறும் உணர்வால் மெய்த்திற னோர்ந்து
எட்டின் பிறழ்நிலை இனிதுற வுணர்ந்தே'
'அறுபான் நான்குறும் அரும்பொருள் நோக்கு
உறுகலை நெறித்திறன் உற்றிவ ணோர்ந்து' [282]

என்ற நூற்பாப் பகுதிகளில் குற்றியலுகரங்கள் யாப்பு முறைப்படி புணர வேண்டியவை தனித்து நிற்பது குறைபாடாகும். இந்த ஈற்று முதற் குறை பலவிடங்களில் உள. யாப்பில் குற்றியலுகரத்தை வரும் உயிரோடு புணர்க்காத போக்கு அண்மைக்காலத்து வருகையாகப் பார்க்கின்றோம். இக்குறையை உணர்ந்த ஐந்திற நூலார் எண்ணிறந்த சீர்களில் ஏகார அசையைச் சேர்த்து, தெரிந்தே, ஓர்ந்தே, உணர்ந்தே, ஆய்ந்தே, உற்றே, தேர்ந்தே, கிளந்தே, தெளிந்தே என்றாங்கு யாப்பொழுங்கு படுத்தலையும் காணலாம்.

உ] எண்ணிறந்த தொடைவகைகட்கு எடுத்துக் காட்டான இலக்கியம் என்று பாராட்டுமாறு, ஐந்திறத்தின் தொடை வளம் பல்கியுள்ளது. எந்தச் சிறிய பெரிய தமிழிலக்கியத்திலும் இத்துணைத் தொடை விகற்பங்களைக் கண்டதில்லை. பெருங்காப்பியங்களிலும் இடம் பெறாத தொடைச் செல்வங்கள் ஓர் அறிவியற்கலை நூலில் மண்டிக் கிடப்பது கற்றற்கரிய காட்சியாகும். ஓரடியுட் கிடக்கைத் தொடையும் பல அடிதோறும் வருகைத் தொடையும் அளப்பில.

'ஒருபொருள் பல்பொருள் பெரும்பொருள்
நுண்பொருள்' [219]
'தமிழிசை இமிழிசை உமிழிசை குமிழிசை' [548]
'ஓவம் ஓவியல் ஓவியம் ஓம்கவை' [616]
'தாயொளி தீயொளி சேயொளி நோக்கி' [679]
'நிலமனை வாழ்மனை வளர்மனை ஆழ்மனை
ஒளிமனை பெருமனை சிறுமனை யியலாய்' [696]
'செங்குடில் பைங்குடில் கருங்குடில்
வெண்குடில்' [843]

இத்தகைய கிடக்கைத் தொடைகள் கருத்துவளம் தருவனவா என்பது ஐயம். இது போல நீண்ட அடிவருவகைத் தொடைகளும் ஐந்திறத்து மலிந்துள. நூற்றுக்கணக்காக எடுத்துக் காட்டலாம். இடச்சுருக்கங்கருதிச் சான்றுக்கு ஒன்று:

'மாநெறி வொன்றே மாக்கலை மூலம்
மாநெறி மாயியல் மெய்க்கலைக் காலம்
மாநெறி நிலைப்பணி எண்ணெண் கலைத்திறன்
மாநெறி யியலே கணக்கியல் ஆற்றல்
மாநெறி ஆடலான் கலைநிலை யாற்றல்
மாநெறி செந்தமிழ் நெடுங்கணக் கியலே
மாநெறி தூநெறி குறுங்கணக் கியலே
மாநெறி ஆயம் நிலைபொருள் தேர்தல்
மாநெறி இயலால் எழுத்தியல் மூலம்
மாநெறி செந்நெறி ஐநெறி மூலம்
மநெறி இயலால் ஐந்தியல் நுட்பம்
மாநெறி வொன்றே எண்ணிலை மெய்த்திறன்
மாநெறி நோக்கே எண்கலை எண்ணியல்
மாநெறி திறனால் எண்முறை ஆய்ந்தே
மாநெறி யாற்றலும் பழுதறு விளக்கம்
தூநெறி தொன்மையும் சொற்பொருள் உண்மையும்
வண்மையும் உண்மையும் வளர்நிலை யாற்றலும்
எண்மையும் நுண்மையும் இயல்பிற் றேர்ந்தே
நுண்கலை நுணுக்கம் திட்பமும் ஆய்ந்தே
எண்கலை கணக்கியல் இயல்நெறி யாற்றலால்
விண்ணெறி நோக்கி விளம்புமா நெறியால்
எண்ணெறி இயலல் அறுபான் நான்கே' [842]

இத்தகைய நெடுந்தொடையடுக்குகளால் ஐந்திற ஆசிரியர் தொடை வேட்கையர் என்பதும் ஓசைச் செவிஞர் என்பதும் வெளிப்படை. யாப்பு வரலாறு நோக்கின் இன்ன தொடை பெருக்கம் மிகப் பிற்காலத்தது என்பது போதரும். எந்த ஒரு தமிழ் நூலிலும் இவ்வளவு தொடை மலிவுகள் இல்லை. இவற்றால் கருத்துகள் நலிவும், மெலிவும் இப்பெரு நூலுக்கு ஏற்படலாயின.

ஐந்திறம் என்ற நூற்பெயரும் பொருளும்:

இந்நூலில் எழுத்தியல், மொழியியல், இசையியல், சிற்ப சித்திரம், ஓவியம், நாட்டியம், வளியியல், விண்கலவியல், நிலவியல், மனையியல் என்றின்ன பல துறைக் குறிப்புகள் உள. இவை அறிமுக நிலையில் உள்ளனவே. எந்த ஓர்

அறிவியலும் நிறைவாகச் சொல்லப்பெறவில்லை. எனினும் எல்லாத் துறைகட்கும் அடிப்படையான மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் என்ற ஐந்தியலை நூல் முழுதும் வலியுறுத்திச் செல்கின்றது. ஐந்திறத்துக்கு அறிமுகவுரை எழுதிய முதல்வர் கணபதி தபதியார் ஐந்து என்ற எண் குறியைப் பற்றி நல்விளக்கம் தருகுவர். இதனாற்றான் நூலின் தொடக்கமுதல் இறுதி வரை மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் என்ற கிளவிகள் தொடைவரிசையாக வந்து விடுகின்றன.

'காலமும் மூலமும் கடிதற நோக்கிக்
கோலமும் சீலமும் நவையறப் புரிந்து
ஞாலம் காணும் நல்லறி வாளரே [832]

இன்ன நடையில் வரும் நூற்பாக்கள் பலப்பல. ஆதலின் எழுத்து, சொல், பொரு, யாப்பு, அணி என்ற ஐந்தினையும் திறப்படி விளக்குவது இந்த ஐந்திறநூல் என்ற கருத்துகடியத்தகும்.

நூல் முழுதும் நோக்கின் எழுத்துப் பற்றி நனிசில குறிப்பு உண்டு. புணர்ச்சி விதி எதுவுமில்லை. ஐந்தினை பற்றிய குறிப்பு தவச்சில; துறை பற்றி யாதுமில்லை. சொல், யாப்பு, அணி, பற்றிய குறிப்பு வரவில்லை. எனவே தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல், நம்பியகப் பொருள், வெண்பாமாலை, தண்டியலங்கலரம் போன்ற மொழியிலக்கண நூலாகக் கொள்வது என்னானும் பொருந்தாது. அத்தகைய ஒரு மயக்கக் கருத்துக் கொண்டமையாற்றான், தொல்காப்பியப்பாயிரம் கூறும் ஐந்திரம் என்ற சொல்லோடு இணைத்துக் காணும் பெருவழு ஏற்பட்டது. மயன் பெருந்தச்சனாகக் கருதப்படுதலன்றி இலக்கணியாகச் சொல்லப்படுதல் இல்லை. தொல்காப்பியத்து மூலம் காலம், சீலம், கோலம் முதலான கோட்பாடு பேசப்படவில்லை என்பதனை நினைவு கொள்ளுங்கள்.

பல்வேறு அறிவியலுக்கெல்லாம் அடிக்கூறுகள் ஐந்தாற்றல் என்பதனைச் சுட்டிக் காட்டுவதே ஐந்திற நூலின் நோக்கம். நிலமனைத் திருநூல், ஏழிசைச் செந்நூல், பெருநடச் செந்நூல், விண்கலச் செந்நூல், ஓவியச் செந்நூல், என்ற பல நூற் பெயர்கள் ஐந்திறத்தில் வருவ. இவையெல்லாம் ஒவ்வோர் துறை குறித்த தனிக் கலை நூலாகும் என்றும் இவற்றில் அத்துறை தொகுத்தும் வகுத்தும் தொகை விரியாகவும் அமைந்திருக்கும் என்றும் ஊகிக்கலாம்.

'வந்தசெந் தமிழொளி ஆடலான் அருளால்
அகமகிழ்ந் தின்புற் றைம்புலத் தொன்றி
மிகுமொளி யுணர்வால் பன்னிரு செந்நூல்' [892]

என்பது ஐந்திறத்தின் இறுதி நூற்பா, பன்னிரு தனித் துறைகள் குறித்த தனிநூல்கள் மயனாற் செய்யப்பட்டவை என்று அறியலாம். இந்நூல்களைப் புலவர் நன்மகன் வீரபத்திரனார் மனனம் செய்து கொள்கலமாகக் காத்துள்ளார் என்று தெரிவதால், இவை விரைவில் அச்சு வடிவாக வெளிவரும் பொன்னாளைத் தமிழறிஞர் உலகம் எதிர் பாக்கின்றது. மேலும் சில செந்நூல்கள் வெளிவந்த பின்றையே ஐந்திறம் குறித்த ஐயமும், திரிபும், அகல வாய்ப்பும் உண்டு.

ஓவியம், சிற்பம், சித்திரம் முதலான நுண்கலைகளையும், நீரியல், மணையியல், விண்ணியல் முதலான அறிவியற்கலைகளையும், நுவலும் இயல் நூலாதலின், ஐந்திற நூலை மதிப்பிடத்தக்கவர்கள் இத்துறைகளில் வல்ல கல்வியாளர்களேயாவர். இலக்கிய இலக்கணப் புலவர்கள் கலைக் கொள்கை களையும், துறைக்குறியீடுகளையும் மதிப்பிடவியலாது. இக்கலைகட்கெல்லாம் மானங்கள் என்னும் அளவுகளும், ஒன்று முதல் பத்து வகைத் தாளங்களும், ஒடிவு வளைவுகளும், ஆயாதி மரபுகளும் நுண்ணடிப்படையாதலின், ஐந்து எட்டு அறுபத்து நான்கு என்றினைய எண்கள் பல நூற்பாக்களில் வருவ. தாளம், அணு, தேர்த்துகள், இம்மி, நெல், எள், விரல், புள்ளி, புள்ளிமையம், கேரடு, வளைவு, ஆநிலம், தூணிலை, செங்குடி, பைங்குடி, கருங்குடி, கணுக்கம், நுணுக்கம், ஈர்ப்பு, வேர்ப்பு, நுண்ணிமை, தேற்றம், தோற்றம், பெருநொடி, சிறுநொடி, நொடி, விண்ணெறி, முகடு, மாற்றல், ஏற்றல், வீசல், கதிர்க்குறுகலை, கதிர்க்கணுக்கம், கீற்றொளி, விண்மை, தெருண்மை, மருண்மை முதலாகப் பன்னூற்றுக் கலைச்சொற்கள் நூற்பாக்களில் பயின்று வருவது இயல்பே. இவற்றைக் கூறியது கூறலெனக் குற்றஞ் சொல்லலாகாது. கலைக்கூறு ஒவ்வொன்றினையும் உரிய சொற்கள் கொண்டு விளக்கும் தன்னிறை நடையாகக் கொள்ள வேண்டும். சிலப்பதிகாரத்தில் வரும் இசைத் தமிழியலை அரும்பதவுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் பொருந்திய கலை நூல்களை மேற்கோள் காட்டி விளக்கியாங்கு, ஐந்திறப்பகுதிகளும் அவ்வத்துறை வல்லுநரால் இக்காலத்திற்கேற்ற வரைகோடு வண்ணங்களோடு விளக்கம் பெறல் வேண்டும்.

ஓம் ஒளி, ஓம் ஒலி:

மூலம் முதலான ஐந்தியல் கூறும் ஐந்திற நூல் அனைத்தையும் ஓம் ஒளி, ஓம் ஒலி என்பதன் ஓர் இயக்கமாக நிறுவுகின்றது. இது சமய நோக்கன்று; அறிவியல் நோக்கு என்றாலும் சமயப் பின்னணியும் ஒன்று உள்ளதுபோல் சில தொடர்களும்,

கருத்துகளும் புலப்படுத்துவ. சிற்றவை, பெருவெளிமன்று, முருகு, திருநெறி, ஆடலான் என்ற சொற்கிளவிகள் இதற்குச் சான்று. சைவத்தைத் திருநெறி என்பது ஒரு வழக்கு. 'திருநெறிய தமிழ் வல்லவர்' என்பது தேவாரம்.

''அம்மையும் அப்பனும் சேயு மாய்த்திகழ்
செம்மைத் திருநிலை ஆட லானும்
அருளும் அன்பும் அறிவும் விளக்கும்
தெருளுங் கூட்டி மருளும் போக்கும்
தென்முக நோக்கும் விண்முக நோக்காய்
மூவொளி கூட்டும் பேரியல் தன்மை [876]

என்ற நூற்பா சமய மெய்ப்பொருள் பற்றிய ஆழ்ந்த நோக்கினைப் புலப்படுத்தும்.

உமை முருகு சிவன் என்ற [சோமாற்கந்தம்] முக்கூட்டொருமைப் படிமமும் தக்கணமூர்த்தி எனப்படும் தென்முகக் கடவுள் நிலையும் பேரொளி தாயொளி, சேயொளி என்ற மூவொளித் தன்மையும், தமிழ்நிலைத் திருநெறியும், கூத்தப் பெருமானின் ஆடற்கலைநெறியும் குறிக்கப்படுகின்றன. சைவப் பேரறிஞர் முருகவேள் தெய்வத் திருவுருவங்கள் என்ற நூலில், இந்திய நாட்டில் வேறு பிற எந்தப் பகுதியிலும் இன்றித் தமிழகத்திலே மட்டும் காணப்படும் திருவுருவம் உமை முருகு சிவமேனி என்பர். ஐந்திற நூலார் உலகவியக்கத் திருக்கூத்தாடும் ஆடவல்லானை மட்டும் கூறாது அம்மை-யப்பரோடு சேயொளியாகிய முருகனையும் இணைத்துக் காட்டும் தனித்தன்மை சிந்தனைக்குரியது.

தமிழ்ப்பெருமையும் நூலாசிரியன் நோக்கமும்:

ஐந்திற நூலினை மேலோடாகப் பார்த்தாலும், உள்ளகமாகப் பார்த்தாலும் இதன் ஆசிரியன் இத்தகைய ஒரு பனுவலை ஆக்குதற்குரிய உள்ளுணர்வுகளும் அவற்றைப் புலப்படுத்தும் நன்முறைகளும் தெளிவாகின்றன.

1. எனைவகை அறிவியல்களையும் சொல்லும் ஆற்றல் செந்தமிழுக்கு உண்டு.
2. துறைக் கிளவிகள் எல்லாம் தூய இனிய தமிழாகச் சொல்லும் ஆற்றல் ஒளித் தமிழுக்கு உண்டு.
3. பல்வேறு கலைகளையும் முன்பே விரித்துரைத்த செந்நூல்கள் முந்து செந்தமிழுக்கு உண்டு.

இந்த முப்பேருண்மைகளை ஐந்திறம் பறையறைகின்றது.

ஐந்திறம் தொன்மைக்கால நூலானால் என்ன? இன்றைய நூலானால் என்ன? எபதியவன் மயனானால் என்ன? பிறனானால் என்ன? கருத்து மடக்காக இருந்தால்

என்ன? தொடை மிகுதியாக இருந்தால் என்ன? தொடர்கள் பின்னியும், பன்னியும் வந்தால் என்ன? தற்கொலைக்குத் துணிந்த சீதைப்பிராட்டி:

'அரக்கனே யாக வேறோர் அமரனே ஆக வன்றிக்
குரக்கினத் தொருவ னேதான் ஆகுக கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிரிதின் உதவி
யுண்டோ'

என்று அனுமன் வரவுக்கு உயிர்தளிர்த்தாற் போன்ற உணர்வை இப்போது ஐந்திறம் நமக்கு ஊட்டுகின்றது. தமிழ் என்ற ஒரு பெயரை வைத்துக்கொண்டு தூய்மையும் செம்மையையும் அகற்றி, ஒலியாலும், எழுத்தாலும், சொல்லாலும், தொடராலும், கருத்தாலும், குணத்தாலும், கலப்புப் பேய்மைகளையும், கன்மாரிகளையும் திணிக்கும் இந்நாளில், ஐந்திறப் பதிப்பு எம்மனோர்க்கு உயிரூட்டும் நல்லுரமாக இலங்குகின்றது.

ஐந்திற நூலில் தமிழுக்குக் கொடுத்த பண்படைகள் எண்ணிறந்தன. தமிழ்ப் பெருமை கூறாத நூற்பா இல்லை. இதுகாறும் வந்த தமிழிலக்கியங்களில் இயம்பப் பெற்ற தமிழடைகளின் எண்ணிக்கையைத் தொகுத்துப் பார்ப்பின், அது கைம்மண்ணளவாம்; ஐந்திறத்திலோ இக்காலக் காவிரியளவாம். ஐந்திறம் இலக்கியமன்றேனும், தமிழ் பற்றிப்பாடும்போது எவ்வளவு உணர்ச்சி வெள்ளம், எவ்வளவு நாடித் துடிப்பு, எத்துணையோ மனக்குமுறல்களும், கிளர்ச்சிகளும், புரட்சிகளம், எழுச்சிகளும் ஐந்திறவாசான் நெஞ்சில் பிறந்திருக்கின்றன.

'உயிர்க்குல முதன்மொழி ஒண்டமிழ் வண்டமிழ்' [808]
'தென்மொழி பன்மொழி மூலம்' [810]
'மூல மாமொழி கால முணர்மொழி' [712]
'ஞாலம் ஆள்வர் நற்றமிழ் நெறியால்' [831]
'தென்மொழி முதன்மொழி சாற்றல் நெறியே' [223]
'தொன்மொழி தொன்னிலை தொன்மர
பியல்நெறி' [776]
'தண்டமிழ் மூலம் தனித்தமிழ்க் காலம்' [798]

முழுத்தமிழ், சிற்பச் செந்தமிழ், விண்தமிழ், எண்தமிழ், பூந்தமிழ், மாத்தமிழ், கனித்தமிழ், தொழிற்கலைத்தமிழ், ஒளித்தமிழ், ஒளிமொழித்தமிழ், முதனிலைத் தமிழ், தெள்ளுநற்றமிழ், தலைமொழி, ஒலிச்செந்தமிழ், ஒண்தமிழாற்றல் எனவரும் பன்னூறு இனிய தொடர்களால் தமிழ்த் திறத்தை வழுத்துகின்றது ஐந்திறநூல். உயிர்க்குல முதன்மொழி, தனித்தமிழ்க்காலம், பன்மொழிமூலம், மூலமாமொழி என்ற கருத்துகள் இன்றைய மொழியுணர்வு பாய்ச்சுகின்றன.

'நாடும் மொழியும் இருவிழி யென்றே
நாடுறும் உய்த்துணர் நெறிநிலை' [744]

என்று அமைச்சியல் நெறி பகர்வர் ஐந்திறத்தார். இன்றைய மொழி வளர்ச்சிக்கு எத்துணை எழுச்சி மிகுந்த அறிவுரை இது.

'குமரி மாநிலம் நெடுங்கலை யாக்கம்
அமர்நிலைப் பேரியல் பெற்புறுந் திறனாய்ப்
பஃறுளி யாற்றுப் பெருமலை திறனிலைப்
புக்குறும் நிலைத்திறன் ஏழேழ் நிலமும்
ஏழேழ் நாடென இயம்புறுங் காலை
நால்வகை நிலமும் நன்னெறி விளக்கி
நூல்வகைத் திறனாய் பால்வகை விளக்கி
ஆக்கமும் நிறையும் வாழ்வியற் கலையும் [212]

என்ற நூற்பாவில் குமரிக் கண்டமும் பஃறுளியாறும் குமரிக்கோடும் நாற்பத் தொன்பது நாடுகளும் அத்தொல்பழங்காலத்தே நானிலப்பகுப்பும், நூல்வகைச் சிறப்பும், பல்வகைக் கலையும் சிறந்த பெற்றியைத் தமிழ்ப்பற்றோடு இசைப்பர் ஐந்திறத்தார்.

இந்நூலுக்குத் தொடக்கத்துக் கடவுள் வாழ்த்து இல்லை. அவையடக்கம் இல்லை. பிறர் பாடிய பாயிரம் இல்லை. எனினும் இறுதி நூற்பாவை இவை யாவுமாகக் கருதுவதற்கு இடனுண்டு. வேந்தன் மகிழவும், தீந்தமிழ்க்கழகச் சான்றோர் புகழவும் அவைக்களத்துச் செந்தமிழொளியான ஆடலான் அருளால் பன்னிரு செந்நூலை மயத்தமிழ்ச் சிற்பி அளித்தான் என்பது இந்நூற்பாவின் கருத்து, ஏனைச் செந்நூல்களும் வெளிவரும்போது, இக்கருத்து மேலும் தெளிவு பெறலாம். மயன் என்ற ஆசான் பழைய மயன்வழி வந்தவனாக இருக்கலாம், ஆசான் யாராயினும் அவன் காலம் எதுவாயினும் அவன்தன் தூய தமிழ் நோக்கம் பின்வரும் நல்லடிகளால் வெள்ளிடைமலை.

'செந்தமிழ்ச் சான்றோர் சீரவை சேர்ந்தே
ஏட்டெழுத் தியற்றமிழ் ஐந்திறம் அளித்தனன்
நாட்டுணர் வோங்கும் நறுந்தமி ழுணர்வால்
இருகை குவித்தே இன்புற் றவித்தனன்
திருவுறும் ஆடலான் அருள்நிலை சிறந்தே
ஆன்றவிந் தடங்கும் அருந்தமிழ்ச் சான்றோர்
ஏன்றுள மகிழ்ந்து வாழ்த்துவீர் நன்றே
அயல்நெறி சாராத் தமிழொளி யுணர்வால்
மயத்தமிழ்ச் சிற்பி அளித்தனன் மகிழ்ந்தே' [892]

நாட்டுணர்வும், நறுந்தமிழுணர்வும், அயல்நெறி சாராத் தமிழொளியுணர்வும் கொண்டு ஐந்திறம் படைக்கப்பட்டதாதலின், ''ஏன்று உளம் மகிழ்ந்து வாழ்த்துவீர் நன்றே'' என எதிர்காலத் தமிழ்மக்களை வேண்டுகின்றான் மயன் தமிழ்ச்சிற்பி. இதனைவிட அவையடக்கம் ஒன்று வேண்டுமா? அயல்நெறி கொள்ளாத் தமிழுணர்வைவிட நல்லாசிரியனுக்கு வேறு ஒரு தகுதி வேண்டுமா? 'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல' என்ற சேக்கிழார் துணிவுரையை நாம் என்றும் நினைவோமாக.

''தொன்மையவாம் எனுமெவையும் நன்றாகா இன்று
தோன்றியநூல் எனுமெவையும் தீதாகா''

என்ற சிவப்பிரகாசம் நம் ஆய்வுக்குரிய ஐந்திற நூலுக்கும் பொருந்தும்.

நன்றி – செந்தமிழ்ச் செல்வி